GOKULAM

டிசம்பர் 2010 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்


குழந்தைகளின் குதூகலம்!



• நெற்றிக் கொம்பன்!

• 'பூச்சி' மீட்டர்!

களிப்பூட்டும் கலை!



EACH POWER CAN BE UNLOCKED BY EATING THEIR FAVOURITE POPPINS. 10 POWERS: SHAPE SHIFTER- GREEN APPLE, SPEED-MANGO,
PARLE
POPPINS
Ram and Shyam
ராம், ஷியாம் மற்றும் தேவதை
PART 1

கல்கி
கோகுலம்
டிசம்பர் 2010 மலர் : 28 இதழ் : 11

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

வெற்றிகள் வசப்படும்!

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலை லும், ஒவ்வொருவரும் ஆசைப்படு ன்ற விஷயம் வெற்றிதான். அதை டைவதற்கான முயற்சியில்தான் எல் லாருமே ஈடுபடுகிறோம். ஆனால், ல்லோரும் அந்த வெற்றியைப் பெறுகி ர்களா என்றால் இல்லை. என்ன கார ம்? விருப்பம், முனைப்பு, உழைப்பு ல்லாம் இருந்தும், வெற்றி கைகூட ல்லை என்றால் ஏன்? இப்படியொரு கள்வியை எழுப்பினால்தான், வெற்றிக் ான வழி இது மட்டுமல்ல என்பது ரியும். வேறென்ன?

தொடர் முயற்சி, இடைவிடாத பிற்சி, தளராத ஊக்கம் இவைதான் ல்லா வெற்றிகளுக்கும் அடிப்படையான விஷயம். அது அறிவியல் கண்டு பிடிப் பாகட்டும்; விளையாட்டில் சாதனையா கட்டும்; பள்ளித் தேர்வாகட்டும்... எல்லாவற்றுக்கும் இதுதான் அடிப்படை.

இந்த இதழிலேயே இடம் பெற்றுள்ள - மாணவச் செல்வங்களின் வானியல் கண்டுபிடிப்புகள், பறக்கும் கார், விளை யாட்டில் தங்கம் வென்றவர்கள் எல்லோ ரும் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான். இதை மனத்தில் பதிய வைத்துக் கொண் டால், நாம் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி வசப்படும்.

அன்புடன்,
கோகு



சிரிப்பலை






பஞ்சு இட்லி!



''கத்தி, கத்திரிக்கோல், ஊசி இதையெல்லாம் வைச்சு டாக்ட பூஜை பண்றாரே, ஏன்?''

''அதுவா? இது அவருக்கு நூறாவது ஆபரேஷன். இர் முறையாவது பேஷன்டைக் காப்பாத்துன்னு வேண்டிக்கிறார்

- ஏ. சுந்தரராஜன், உ.எண். 1158, திருக்கழுக்குன்ற



''பக்கத்து நாட்டு மன்னன் பேங்க்ல அக்கவுன்ட் வைத்திருக்கிறான் அரசே''

''எதை வைத்துச் சொல்கிறீர்கள்?''

''சாதாரண ஓலை அனுப்பாமல், காசோலை அனுப்பியிருக்கிறான்...''



''என்ன அந்தப் பிச்சைக்கார உங்ககிட்டே நூறு ரூபாய் கேட்கிறான்?''

''நான் அவன்கிட்டே அவ்வளவுதா கடன் வாங்கியிருந்தேன்.''

- அ. கோபால்சாமி, உ.எண்.111 பழைய அய்யம்பாளைய

"உங்க கடை இட்லி பஞ்சு மாதிரி இருக்கே. ப்படி?"

"அதுவா? உளுந்துக்குப் பதிலா பருத்திக் காட்டையைச் சேர்த்து மாவு அரைக்கிறோம்."

- த. பிரகல்யா, உ.எண். 318,
தஞ்சாவூர்.



"கப்பல் பெட்ரோல்ல போகுதா ல்லை டீசல்ல போகுதா?"

"இரண்டுலேயும் இல்லை. ண்ணியிலே போகுது"



"மயிலே மயிலேன்னா இறகு போடாது. ஏன் சொல்லு?"

"அதுக்கு தமிழ் தெரியாது"

"அதுதான் இல்லை. இறகு போடுன்னு சொன்னாத்தான் போடும்."

- பி. பரத், உ.எண். 1257,
கோவிலாம்பூண்டி

கல்கி குழும வெளியீடு தரம் நிரந்தரம்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!


'கலை' என்பது கற்பதற்கு உரியது. இதை நுண் கலை ,தொழில்நுட்பக் கலை, அரங்காடல் கலை, கட்புலக் கலை... என்று வகைப்படுத்துவார்கள். 'கலைகளின் நாயகி' என்பதால்தான், சரஸ்வதிக்கு கலைமகள் என்றும் பெயர்.

ஆய கலைகள் அறுபத்து
நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை
- தூய
உருப்பளிங்கு போல்வள் என்
உள்ளத்தில்
இருப்பளிங்கு வாரா இடர்.

என்பது கம்பனின் சரஸ்வதி அந்தாதிப் பாடல்.

நடனம், நாடகம், இசைக் கருவிகள் வாசித்தல், பாடல், சொற்பொழிவு, கவிதை, ஓவியம், சிற்பம்... என்று இவை விவரிக்கப் பெருகும். ஆழ்ந்த கற்பனை, உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகியவற்றைக் கொண்டு, பார்க்கின்றவர்களின் எண்ணங்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் சிறப்பு, கலைகளுக்கு உண்டு.

இசை, ஓவியம்... என்று எந்தக் கலையானாலும் சரி, அதன் அடிப்படைத் தேவை கூர்ந்த கவனமும், மிகுந்த ஆர்வமும், தேர்ந்த நிதானமும். கலையைப் பயில இவை அவசியம் என்றால் அதில் சிறந்து விளங்க, இடையறாத பயிற்சி வேண்டும். இவை ஒன்றி சைந்தால் மட்டுமே, தனிச்சிறப்பு மிக்க வர்களாக, சாதனை யாளர்களாக விளங்க முடியும். அதே சமயம், மனத்தை இலகுவாக்கிக் கொள்ளவும்



களிப்பூட்டு

உதவக்கூடியது கலை!

பாடங்களைப் படிப்பதற்கு எவை அவசியமோ, அவைதான் கலைகளுக்கு அவசியம். அதே சமயம், கலைகள் உ சாகத்தையும் கொடுக்கும் என்பது கூ தலான பலன். இதனால், மன அழுத்த குறையும், கவனம் கூர்மைப்படும்; கலை யின் எந்த வடிவமாக இருந்தாலும், அ தரும் நிச்சயமான பலன் இது.

எண்ணங்களில் மென்மை, ரசனை கற்பனை என்று வளர்க்கும் வசீகர கலையின் தனிச்சிறப்பு! அதில் ஈ படுவதனால், நம்முடைய இய பிலும் மென்மையும் மேன்மையு உண்டாகும் என்பது பலரின் அனு பவம்!

அதனால், ஏதேனும் ஒரு 'கலை யைக் கற்றுக் கொள்ளுங்கள். அது ந களைப்பைப் போக்கும்; களிப்பூட்டும்!



ராகவன்

அட்டை, வண்ணப்படம்: ஸ்ரீஹரி



கலை!

''ரெண்டு வருஷமா
வயலின் கத்துக்கிட்டு
வரேன்
படிப்பில் கவனம்
கூர்மைபடவும்,
பதற்றம் இல்லாமல்
செயல்படவும்,
வயலின் வாசிப்புதான்
எனக்கு
உற்சாக டானிக்'' என்கிறான்
சென்னை
அசோக் நகர்
ஜவஹர் வித்யாலயாவில்
எட்டாம் வகுப்பில் பயிலும்
அஸ்வின்.

சமம்!

''சொன்னாக் கேளு வேணி, நம்ம குடும்பம் இருக்கிற நிலையிலே, கோபியைப் படிக்க வைக்கிறதே கஷ்டம். பொட்டப் புள்ளை உன்னைய எங்கிட்டுப் படிக்க வைக்க? பேசாம அம்மாவுக்குத் துணையா வேலைகளைப் பாரு.''

அப்பாவின் வார்த்தைகளைக் கேட்ட வேணிக்குக் கண்ணீர் பொங்கியது. இத்தனைக்கும் அவள் நன்றாகப் படிக்கக் கூடியவள். 'குடும்பநிலை' என்று அப்பா சொன்ன பிறகு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனாலும், அவள் நம்பிக்கை இழக்கவில்லை. காரணம், அவள்தோழி மதுமிதாவின் அம்மா!

''நீ கவலையேபடாதே வேணி. உங்கப்பாகிட்டே நான் பேசறேன். நீயும் மதுமிதாவும் சேர்ந்துதான் ஸ்கூலுக்குப் போறீங்க,'' என்று முன்பே சொல்லியிருந்தார்கள். சொன்னமாதிரியே, மறுநாள் வந்தார்கள்.

''நம்ம காலத்தை விடுங்க. இப்ப புள்ளைங்களுக்கு நாம கொடுக்கற சொத்து படிப்பு தான். சாப்பாடு போடறதும், துணி எடுத்துத் தரதுமில்லே''. இப்படி பேசிப் பேசி, அப்பாவை இளக்கினார்கள். வேணி மீண்டும் பள்ளிக்குப் போக ஆரம்பித்தாள்.

''வேணி, உன்னைய மேல படிக்க வைக்க அப்பாவுக்கு மனசில்லை. ஆனா, அந்த அம்மாவுக்கு மரியாதை கொடுத்து உன்னைப் படிக்க வைக்கிறாங்க. அதை நினைப்புல வைச்சுக்க. அந்தம்மா பேரைக் காப்பாத்து.''

மேல்நிலை வகுப்பில் சேர்ந்தவுடன் அம்மா சொன்னது அவள் நினைவில் இருந்தது. அதனால், அவளது எண்ண படிப்பில் கூர்மையாயிருந்தது. வே எதிலும் அவள் கவனம் சிதற வில்லை அதை தேர்வுகளில் அவள் பெற் மதிப்பெண்கள் உணர்த்தின. அதை வா விட்டுச் சொல்லாவிட்டாலும், மன துக்குள் அவள் அப்பா மகிழத்தான் செ தார்.

அதே சமயம், அவள் அண்ணன் ப ளிக்கு மட்டம் போட ஆரம்பித்தான். ந பர்களுடன் சினிமாவுக்குப் போவது, வம் வளர்ப்பது என்று பாதை மாறினான். 'வீ டில் சொன்னால், அவனை அப்பா அடி பாரோ' என்று பயந்து முதலில் மறைத் வேணி, பிறகு அம்மாவிடம் தயங்கி தயங்கிச் சொல்லிவிட்டாள். ஆனால், 'ஆ பளைப்புள்ளை அப்படி இப்படித்தா இருப்பான். எல்லாம் சரியாய்டும்' என்று அப்பா, அம்மா தலையாட்டினா



குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவுச் சிறு கதைப் போட்டி 2010ல், ரூ.1000/- முதல் பரிசு பெறும் சிறுகதை.



விளைவு, அவன் மேலும் மேலும் தவறிழைக்க ஆரம்பித்தான். பள்ளிக்கு ஒழுங்காக வருவதேயில்லை. பெற்றோர்களும் அதை கண்டுகொள்ளவில்லை.

வேணி தெளிவாக இருந்தாள். 'மனமெனும் பெண்ணே, வாழி நீ கேளாய். ஒன்றையே பற்றி ஊசலாடுவாய்' என்ற பாரதியின் வரிகளை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள். கருத்தூன்றிப் படித்தாள். 'விதைக்கற காலத்தை தவற விட்டுட்டா, அறுக்கற காலத்துல வயல்ல வேலையிருக்காது: வயித்துக்கும் சோறிருக்காது' என்று அப்பா சொன்ன வார்த்தைகளின் பொருள் தெளிவாகப் புரிந்தது அவளுக்கு.



படித்ததைப் புரிந்து கொண்டாள். புரிந்ததை எழுதிப் பார்த்தாள். எழுதியதை சரிபார்த்தாள். ஒவ்வொரு நிலையிலும், தன்னைச் சோதித்துக் கொண்டே இருந்தாள். ஒருநாள் வீட்டுக்கு வந்த மதுமிதாவின் அம்மா சொன்னார்:

"வேணி நிச்சயமா பாஸ் பண்ணிடுவான்னு தெரியும். எவ்வளவு மார்க் எடுத்து, பாஸ் பண்ணப்போறான்னுதான் காத்துக்கிட்டிருக்கேன்." உள்ளேயிருந்து இதைக் கேட்ட வேணியின் கண்கள் கலங்கின.



ப்ளஸ் 2 தேர்வு முடிவுகள் வந்த தினம். சந்தோஷமாய் வீட்டினுள் நுழைந்தார் மதுமிதாவின் அம்மா. கையில் ஸ்வீட் பாக்ஸ்.

"வேணி, மாவட்டத்துலயே முதல் மாண

பி.கவிப்ரியா

வியா பாஸ் பண்ணிருக்கா.'' அப்பாவும், அம்மாவும் உற்சாகமாயினர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மதுமிதாவின் அம்மா, சற்றுப் பொறுத்துச் சொன்னார்:

''உங்க பையனை நியூஸென்ஸ் கேஸ்ல போலீஸ் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. நான் ஜாமீன் போட்டு கூட்டிட்டு வந்துட்டேன்.''

அதைக் கேட்ட அப்பாவின் முகம் அவமானத்தால் சிறுத்துப் போனது. பெல்டை உருவிக் கொண்டு எழுந்தார். அதைப் பார்த்த மதுமிதாவின் அம்மா சொன்னார்:

''நில்லுங்க. இப்ப ஏன் கோபப்படறீங்க?



வேணி படிக்கிறாளே? கோபி படிக்கலையேன்னு நினைச்சீங்களா? அவனை என்ன ஏதுன்னு கேட்டீங்களா? கண்டிச்சீங்களா? பயிர்ல பூச்சி அடிச்சிருக்கான்னு பார்க்கற மாதிரி, பையனையும் பார்த்திருக்கணும் இல்லையா? பையன்னா ஒசத்தின்னு நினைச்சதால வந்த தப்பு. இது உங்களோடது. இனி அவன் சரியாய் வான். இப்போ நீங்க சரியாகுங்க!

பெல்டை உயர்த்திய அப்பாவின் கை தாழ்ந்தது. 'ஆணும், பெண்ணும் சமம்' என்கிற எண்ணம், அவருக்குள் புதிய வெளிச்சமாய்ப் பரவ ஆரம்பித்தது. ●



வாழ்த்துகள்!


பெயரைச் சொல்; பரிசை வெல்-7-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை, குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் : 1. கோலா 2. ஜான் எஃப் கென்னடி 3. சி.என்.டவர்

பரிசு பெறுவோர் : 1. ரா. ராஜப்பிரியா, இராமநாயக்கன்பாளையம் 2. த.மாஸ்கோராணி, கீரமங்கலம் 3. கே.காவ்யா, கோழிமேக்கனூர் 4. சி.ஹேமா, கரூர் 5. டெலிஷியா ஜெஸ்மின், திருச்சி 6. வை.பூர்ண தர்ஷணி, திருநெல்வேலி 7. எஸ்.சுகந்தி, தேனாம்பேட்டை 8. ரெ.சஹானா, மயிலாடுதுறை 9. ந.கார்த்திகா, திருவாரூர் 10. எஸ். இளங்குமரன், வேலூர்



புதிய பொலிவுடன் கல்கி ஆன்லைன்!
இலவசமாகப் பதிவு செய்யுங்கள்
கல்கி
கல்கி ஆன்லைன்
இலவசப் பதிவு!
GOKULAM
Current Issue
மனசெல்லாம் மத்தாப்பு!
http://www.kalkionline.com
இப்போது உங்கள்
கோகுலம்
இணையத்தில்
உடனடியாகப்
படிக்கலாம்!
CLICK HERE



அறிவு தரும் உணவுகள்!

நாம் சாப்பிடும் உணவில் ஐந்து வகைச் சத்துகள் உள்ளன. அவை கார்போஹைட்ரேட், புரதம், கொழுப்பு, வைட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துகள். நம் தினசரி உணவில் இந்த ஐந்தும் தேவையான அளவில் இடம் பெற வேண்டும். அப்போதுதான் உடலின் வளர்ச்சி சீராக இருக்கும். உடல் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

ஐந்து வகைச் சத்துகள்

உடலுக்குச் சக்தியைத் தருபவை கார்போஹைட்ரேட்டுகள். இவை அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு போன்ற காய்கறிகளிலும், உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு போன்ற கிழங்குகளிலும் உள்ளன. உடலின் வளர்ச்சிக்கு உதவுபவை புரத உணவுகள். இவை பால், தயிர், பாலாடை, பருப்பு, பட்டாணி, முந்திரி, பாதாம், தேங்காய், முட்டை, மீன், இறைச்சி முதலியவற்றில் உள்ளன. உடலுக்குச் சக்தி தருவதோடு மட்டுமில்லாமல், தோலுக்கு அழகு சேர்ப்பது, ஹார்மோன்களை உற்பத்தி செய்வது போன்ற முக்கியப் பணிகளைச் செய்பவை கொழுப்பு உணவுகள். நெய், வெண்ணெய், எண்ணெய்கள், வனஸ்பதி, முட்டையின் மஞ்சள் கரு, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி போன்றவற்றில் கொழுப்பு அதிகம்.

உடலுக்குப் பாதுகாப்பு அளிப்பவை வைட்டமின்கள். இவை காய்கறிகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றில் உள்ளன. இறுதியாக வருபவை தாதுச் சத்துகள். கால்சியம், சோடியம், பொட்டாஷியம், அயோடின், இரும்புச் சத்து, பாஸ்பரஸ், சல்ஃபர், மெக்னீசியம், போன்றவை தாதுச் சத்துகள். இவை மிகக் குறைந்த அளவில்தான் நமக்குத் தேவைப்படுகின்றன. என்றாலும், இவை மிகவும் இன்றியமையாதவை. இவற்றில், இதுவரை இத்தொடரில் நாம் பார்க்காத சில தாதுச் சத்துகளை இப்போது பார்ப்போம்.



அன்புள்ள கோகுலம் வாசகர்களே! வணக்கம். இந்த இதழ்க் கட்டுரைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. 'டாக்டர் பக்கம்' என்ற இந்தப் பகுதி தொடங்கப்பட்டு 26-ஆம் ஆண்டு தொடங்குகிறது. குழந்தைக் கவிஞர் அமரர் அழ.வள்ளியப்பா அவர்கள் கௌரவ

டாக்டர் கு.கணேசன்

அறிவு தரும் அயோடின்

உயிரணுக்களின் வளர்ச்சி சரியாக இருப்பதற்கும், உணவுகளின் வளர்ச்சிதை மாற்றப்பணிகள் சீராக நடைபெறவும் மூளை வளர்ச்சி வயதுக்கேற்ப அமையவும் அயோடின் அவசியம். குறிப்பாக, குழந்தைகள் உடலில் அயோடின் சத்து சரியான அளவில் இருக்க வேண்டும். குறைந்தால், உடல் எடை கூடும். முகம் வீங்கும். குழந்தை எந்நேரமும் மந்தமாக இருக்கும். படிப்பில் கவனம் செலுத்த முடியாது. படித்தது மறந்துவிடும். விளையாடக்கூட ஆர்வம் இருக்காது. மூளை வளர்ச்சி குறையும்.

தைராய்டு தெரியுமா?

கழுத்தில் முன் பகுதியில் உள்ள 'தைராய்டு' எனும் நாளமில்லாச் சுரப்பியில் 'தைராக்சின்' எனும் ஹார்மோனைச் சுரக்க அயோடின் தேவை. இல்லையென்றால் கழுத்துப் பகுதியில் ஒரு வீக்கம் தோன்றும். இதற்கு 'முன் கழுத்துக் கழலை' என்று பெயர். இந்த நோய் உள்ள பெண் குழந்தைகள் பருவமடைவதில் சிக்கல் உண்டாகும்.

தைராய்டு பாதிப்பு அதிகம் ஏன்?

மலைவாழ் மக்களுக்கும் வனங்களில் வசிப்போருக்கும் இந்தத் தைராய்டு பாதிப்புகள் அதிகம். காரணம், என்ன? அயோடின் சத்து மண்ணில் உள்ளது. அங்கிருந்து காய்



ஆசிரியராக இருந்த போது இத்தொடர் தொடங்கப்பட்டது. (1985, டிசம்பர் இதழ்). அதாவது, ஒரு பத்திரிகையில் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் ஒரே எழுத்தாளரே ஒரு பகுதியை எழுதியுள்ள சாதனையை இப்பகுதி செய்துள்ளது. இந்த நல்வாய்ப்பை எனக்களித்த அமரர் அழ. வள்ளியப்பா, அவருக்குப்பின் கோகுலம் ஆசிரியர் பதவி வகித்த 'கல்கி' திரு. இராஜேந்திரன், தற்போதைய கோகுலம் ஆசிரியர் திருமதி. சீதா ரவி, பொறுப்பாசிரியர்கள், மூன்று தலைமுறை கோகுலம் வாசகர்கள் அனைவருக்கும் என் மனம் மகிழும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கு. கணேசன், இராஜபாளையம்.

கறிகள், பழங்கள் வழியாக உடலுக்கு வருகிறது. மலைகளில் தொடர்ந்து பெய்யும் மழையின் காரணமாக, மண்ணுடன் சேர்ந்து அயோடினும் அகற்றப்படுகிறது. அதனால் அங்கு விளைகின்ற காய்கறிகளிலும் பழங்களிலும் அயோடின் குறைவு.

அயோடின் மிகுந்த உணவுகள்

இறால் மீன், வஞ்சிரம் மீன், சிப்பி மீன் போன்ற எல்லாவகைக் கடல் உணவுகளிலும் அயோடின் சத்து உள்ளது. அதுபோல் பெரும்பாலான கீரைகளிலும், அன்னாசிப்பழம், பேரிக்காய், ஆரஞ்சு, சாத்துக்குடி, வெள்ளைப் பூண்டு போன்றவற்றிலும் அயோடின் அதிகம். இவற்றை அடிக்கடி உட்கொண்டால், அயோடின் பற்றாக்குறை ஏற்படாது. இப்போது சமையலின்போது சேர்க்கப்படும் உப்பில் அயோடின் கலக்கப் படுகிறது. இதைப் பயன்படுத்தினாலும் அயோடின் பற்றாக்குறை ஏற்படாது.

மூளைக்குத் தொடர்ச்சியாக ஆக்ஸிஜனைஅனுப்பி, நம்மைத் தெளிவாகச் சிந்திக்க வைப்பது பொட்டாசியம் தான்.

சோர்வைப் போக்கும் சோடியம்

மற்றொரு தாதுச் சத்து சோடியம். உடலில் தண்ணீரின் அளவைக் கட்டுப்படுத்துவது. இரத்தத்தின் கார - அமிலத் தன்மையைச் சரி செய்வது. சிறுநீரகச் செயல்பாட்டைச் சரியாக வைத்துக் கொள்வது. இரத்த அழுத்தத்தை முறைப் படுத்துவது. தசைகளின் இயக்கத்துக்கு உதவுவது. மூளை சோர்வில்லாமல் உழைப்பதற்கு உதவுவது போன்ற பணிகளைச் செய்வது சோடியம்தான். இது குறைந்தால் அடிக்கடி தலைவலி வரும். காரணமில்லாமல் வாந்தி வரும். தசைப் பிடிப்பு உண்டாகும். விரல்கள் இழுத்துக் கொள்ளும். எந்நேரமும் உடல் சோர்வாக இருக்கும்.

சோடியம் மிகுந்த உணவுகள்

இதுவும் சமையல் உப்பில் உள்ளது. குடிதண்ணீரில் உள்ளது. முட்டை, பால், மோர், தயிர், காரட், பீட்ரூட், கீரைகள், பழங்கள், பச் சைப்பயறு, துவரை, கொண்டைக்கடலை, வாழைப்பழம் போன்றவற்றிலும் சோடியம் அதிகம். தினமும் மூன்று விட்டருக்குக் குறையாமல் தண்ணீர் குடித்தாலே நமக்குத் தேவையான சோடியம் கிடைத்து விடும். உடலில் சோர்வு இருக்காது. மூளை உற்சாகமாகச் செயல்படும்

தெளிவான சிந்தனைக்கு...

மூளைக்குத் தொடர்ச்சியாக ஆக்ஸிஜனை அனுப்பி, நம்மைத் தெளிவாகச் சிந்திக்க வைப்பது பொட்டாஷியம்தான். இது இளநீரில் அதிகம். பசலைக்கீரை, உலர்ந்த பழங்கள், ஆரஞ்சு, அன்னாசி, வாழைப்பழம், தக்காளி, தர்ப்பூசணி போன்றவற்றில் இது மிகுந்துள்ளது. தினமும் இரண்டு இளநீர் சாப்பிட்டுவர சிந்தனை தெளிவாக இருக்கும். ●

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை (பக்கம் 58) நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● **சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.**

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது



டியர் குட்டீஸ்...

என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

'பூச்சி' மீட்டர்!

என். சொக்கன்

இயற்கை பல விஷயங்களை நமக்குத் துல்லியமாகச் சொல்லித் தந்து விடுகிறது. இது தெரிந்துவிட்டால் எந்திரங்களின் துணை இல்லாமலேயே நேரத்தையோ, அழுத்தத்தையோ, மழை அளவையோ வெப்ப நிலையையோ ஓரளவு துல்லியமாகவே கணக்கிட முடியும்.

எப்படி என்கிறீர்களா? ஒரு நிஜ அறிவியலாளரின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் பாருங்கள்.



அவர் பெயர் அமோஸ் டால்பேர் (Amos Dolbear). பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமெரிக்க விஞ்ஞானி. பல புதுமையான கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரர்.


1897ஆம் வருடம். அறுபது வயது அமோஸ் டால்பேர் தம்முடைய வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இரவு நேரம். வெளியே 'கிரிக்கெட்' எனப் படும் ராக்கோழிப் பூச்சிகள் இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தன.

டால்பேர் எதேச்சையாக அந்தப் பூச்சிகளின் சத்தத்தைக் கவனித்தார். 'சிர்ப்' எனப்படும் அந்த வித்தியாசமான ஒலி அவரது கவனத்தை ஈர்த்தது.

அன்றைக்குக் கிரிக்கெட்டுகள் ஏராளமாகச் சத்தம் போட்டுக்கொண்டிருந்தன. அந்தப் பின்னணி இசைக்கு நடுவே சுகமாகத் தூங்கினார் டால்பேர்.

அடுத்த நாள் இரவு. கிட்டத்தட்ட அதே நேரம். அதே பூச்சிகளின் சத்தம் கேட்டது. ஆனால் இந்தமுறை இரைச்சல் கொஞ்சம் குறைவாக.

டால்பேர் இதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அன்றைக்குக் குளிரும் அதிகமாக இருந்ததால் கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கிவிட்டார்.



மறுநாள் சூரியன் மறைவதற்கு முன்பாகவே டால்பேருக்கு ராக் கோழிகளின் இரைச்சலைக் கேட்கிற ஏக்கம் பிறந்து விட்டது. அவற்றின் 'சிர்ப்' ஒலியில் ஏதோ ஓர் இனம் புரியாத ஈர்ப்பு இருப்பதாக உணர்ந்தார் அவர்.

அதன்பிறகு தினந்தோறும் ராக்கோழிகளின் கச்சேரியைக் கவனிப்பது அவருக்கு ஒரு சுவாரஸ்யமான பொழுது போக்காகி விட்டது. சில நாட்களில் அவை அவிழ்த்து விடப்பட்ட பாத்திர மூட்டைகளைப்போல் ஏகப்பட்ட சத்தம் போடுவதும், சில நேரங்களில் சமர்த்துப் பிள்ளைமாதிரி ரொம்ப அமைதியாகக் கூவுவதும் அவருக்கு



மிகுந்த ஆச்சர்யம் அளித்தது.

இந்தப் பூச்சிகளின் இரைச்சல் அதிகரிப்பதற்கும் குறைவதற்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

மறுநாள் தொடங்கி அவை எழுப்புகிற 'சிர்ப்' ஒலியைக் கணக்கிட ஆரம்பித்தார். ஒரு நிமிடத்தில், 30 விநாடிகளில், 15 விநாடிகளில் அவை எத்தனை முறை ஒலி எழுப்புகின்றன என்று குறித்து வைத்தார்.

இப்படிப் பல நாட்கள் திரட்டிவைத்த தகவல்களைத் தொகுத்து அலசிப் பார்த்த போது, ஓர் ஆச்சர்யமான ஒற்றுமை புலப்பட்டது - இந்தப் பூச்சிகளின் இரைச்சலுக்கும் வெப்ப நிலைக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது.

அதாவது, ஒரு நாளில் வெப்ப நிலை அதிகமாக இருந்தால், பூச்சிகள் அதிகம் கத்துகின்றன. குளிர் அதிகமாக இருந்தால் அவை குறைவாகக் கத்துகின்றன. இதற்கு என்ன காரணமாக இருக்கும்?

ஒருவேளை ராக்கோழிகளுக்குக் குளிர் பிடிக்காதோ? ரொம்ப ஜில்லென்ற சூழ்நிலை வந்தால் மறந்து படுத்துத் தூங்கி விடுகிறதோ? இப்படியெல்லாம் யோசித்த டால்பேர் தம்மிடம் இருந்த குறிப்புகளைப் பலவிதமாகப் புரட்டிப் போட்டு, அவற்றுக்கு இடையே உள்ள

பூச்சிகளின் இரைச்சல் அதிகரிப்பதற்கும் குறைவதற்கும் ஏதோ ஒருகாரணம் இருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது



* அமோஸ் டால்பேர்

தொடர்புகளைக் கணித சூத்திரங்களுக்குள் அடக்கப் பார்த்தார்.

விரைவில் அதில் வெற்றியும் பெற்றார். அதாவது 'ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள கிரிக்கெட் பூச்சிகளின் 'சிர்ப்' சத்தத்தை எண்ணிக் கணக்கிட்டால், அதை வைத்து அங்குள்ள வெப்ப நிலையைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடமுடியும்' என்று நிரூபித்த அவர், அதற்காக ஓர் எளிய சூத்திரத்தையும் உருவாக்கினார்:

$$T = 40 + N$$

இங்கே 'T' என்பது ஃபாரன்ஹீட் வெப்பநிலை. N என்பது 15 விநாடிகளில் கிரிக்கெட்கள் செய்யும் 'சிர்ப்'களின் எண்ணிக்கை. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நாளில் கிரிக்கெட்கள் 15 விநாடிகளுக்கு 30 முறை 'சிர்ப்' செய்கின்றன என்றால், அன்றைய வெப்பநிலை 40 + 30 = 70 டிகிரி ஃபாரன்ஹீட். அவர் அமெரிக்கர் என்பதால் ஃபாரன்ஹீட் ஃபார்முலாவை எழுதிவிட்டார். நம் ஊரில் ஃபாரன்ஹீட் டெல்லாம் வேலைக்கு ஆகாதே. செல்ஷியஸுக்கு வழி ஏதும் இல்லையா?

உண்டு. அதற்கான ஃபார்முலா:

$$T = (N1/3) + 4$$

இங்கே 'T' என்பது செல்ஷியஸ் வெப்பநிலை. 'N1' என்பது 25 விநாடிகளில் கிரிக்கெட்கள் செய்யும் 'சிர்ப்'களின் எண்ணிக்கை. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நாளில் கிரிக்கெட்கள் 25 விநாடிகளுக்கு 45 முறை 'சிர்ப்' செய்கின்றன என்றால், அன்றைய வெப்பநிலை (45/3) + 4 = 19 டிகிரி செல்ஷியஸ்!

தம்முடைய இந்த ஃபார்முலாவை 'கிரிக்கெட் பூச்சி தெர்மாமீட்டர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாகவே எழுதி வெளியிட்டார் அமோஸ் டால்பேர். அதைப் படித்த பலர் ஆச்சர்யப்பட்டார்கள். சிலர் புருடா விடுவதாகச் சொல்லிக் கிண்டல் அடித்தார்கள்.

ஆனால் உண்மையில் அமோஸ் டால்பேரின் ஃபார்முலா இன்றைக்கும் அட்டகாசமாக வேலை செய்கிறது. உலகில் 'ஸ்னோயி ட்ரீ க்ரிக்கெட்' எனும் பூச்சிகள் வசிக்கும் இடங்களில், அவை செய்யும் 'சிர்ப்' சத்தத்தைக் கணக்கிட்டுப் பார்த்து வெப்பநிலையைத் துல்லியமாகக் கண்டுபிடித்து விடமுடியும். தெர்மாமீட்டரே தேவையில்லை!

ஒரே பிரச்னை, இதை வைத்து நம் உடலின் வெப்பநிலையைக் கணக்கிட முடியாது. அதற்கும் நிச்சயமாக ஏதாவது ஓர் இயற்கை வழி இருக்கும். நீங்கள் அதைக் கண்டுபிடித்து உலகப் புகழ் பெறலாமே! ●

தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ.96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

2010 P 024

2010 P 024. படிக்கும்போது ஏதோ அடையாள அட்டை எண் மாதிரி தெரிகிறதல்லவா? ஆனால், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறிய கோள் ஒன்றின் பெயர் இது. ''அனைத்து இந்தியச் சிறுகோள் தேடு முகாம்'' ஒன்றை 'ஸ்பேஸ்' என்னும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதில் இந்தியா முழுதும் இருந்து 45 பள்ளிகள் கலந்து கொண்டன. 'ஸ்பேஸ்' நிறுவனம் கோள்களைத் தேடும் பயிற்சியை மாணவர்களுக்கு வழங்கியது. இதில் பங்கேற்ற டெல்லி, ரயான் இன்டர்நேஷனல் பள்ளியின் (Ryan International School) அமன்



ஜக்சிங், சஹில் வாத்வா என்னும் இரண்டு மாணவர்கள் தீவிர ஆராய்ச்சியின் பயனாக, கடந்த ஆகஸ்ட் 6 அன்று ஒரு சிறு கோளைக் கண்டறிந்தனர். இதற்கு 2010P024 எனப் பெயரிட்டுள்ளனர். (A Main belt Asteroid 2010P024) அமன்ஜக்சிங் வானியல் ஆய்வுக் குழுவில் உறுப்பினராக உள்ளார் என்பது சிறப்பு. இந்தியாவில், பள்ளி மாணவர் கோள்களைக் கண்டறிந்தது இதுவே முதல்முறை! சர்வதேச வானியல் ஆய்வு முகாமின் இயக்குநர் பேராசிரியர் பேட்ரிக் மில்லர், மாணவர்களின் சாதனையைப் பாராட்டி வாழ்த்து அனுப்பியுள்ளார்.

செயற்கைக் கோள்!

இந்தியாவின் முதல் பைகோ செயற்கைகோளை (Pico Satellite) மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். பெங்களூரு மற்றும் ஹைதராபாத்தில் உள்ள 7 பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களின் சாதனை இது. ஏப்ரல் 17, 2010 அன்று நாட்டின் மிகச்சிறிய செயற்கைக் கோளான 'ஸ்டட்சாட்'



(Studsat) - அதாவது 'மாணவர் செயற்கை கோள்'ஐ, இந்திய விண்வெளி ஆய்வுக்கழகத்துக்கு வழங்கியுள்ளனர். இது இந்தியாவிலுள்ள இளநிலை பொறியியல் மாணவர்களால் முதல்முறையாக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்டு விண்ணில் ஏவப்படு



*RH 200 ராக்கெட்டுடன் மாணவர்கள்

கின்ற மிகச் சிறிய செயற்கைக் கோளும் இதுதான்.


சிறிய கன சதுர (CUBE) வடிவத்தைக் கொண்ட இதன் எடை வெறும் 850 கிராம்; கொள்ளளவு 101 லிட்டர். இது 700 கிலோ மீட்டர் வட்டப் பாதையிலிருந்து (Sun synchronous orbit) ஏவத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது 90 மீட்டர் துல்லியத்துடன் பூமியின் மேற்பரப்பைப் படம் பிடிக்குமாம். இந்தச் சிறப்பு உலகின் வேறு எந்த 'பைகோ' வகையான செயற்கைக் கோளுக்கும் இல்லை என்கிறார்கள்.



*Studsat

சவுண்டிங் ராக்கெட்!

வேலூர் விஐடி பல்கலைக் கழக மாணவர்கள் தேவ் சர்மா, சுனயன் குமார், ஹிமான்சு மிஸ்ரா, சந்திரேஷ் மிட்டல், அங்கிட் சர்மா, மணிஷ் குமார் நர்னோலி, நிதேஷ் குமார், கௌதம் அலோக் ஆகியோர் இணைந்து ராக்கெட் ஒன்றை உருவாக்கியுள்ளனர். ''சவுண்டிங் ராக்கெட் ரோகிணி 200'' (RH200) என இதற்குப் பெயரிட்டுள்ளனர். இந்த ராக்கெட், கருவிகளைக் கொண்டு செல்லும் வகையைச் சார்ந்தது. மேலும், அளவுகள் எடுக்க ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய விண்வெளித் துறையின் 40 ஆண்டுகால வரலாற்றில் மாணவர்களால் இதுபோன்ற ராக்கெட், வடிவமைக்கப்படுவது இதுவே முதல் முறை. 'RH200' எனப்படும் இந்த ராக்கெட் திருவனந் தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்திலிருந்து ஜூலை 7, 2010, மாலை 3 மணிக்கு விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.



*RH 200

முனைவர் ஆசுரா

அருவி என்றவுடன், நீர்ச்சிதற லாக வெள்ளிக்கற்றையாக ஒலியெழுப் பியபடி பாய்ந்து வரும் குற்றால அருவியின் நினைவு வரும். ஆனால், இந்தியாவிலேயே மிகப்பெரிய அருவி என்று சொல்லப்படுவது ஜோக் (jog) அருவிதான். இது கர்நாடக மாநிலத்தில், ஷிமோகா மாவட்டத்தில் உள்ளது. ஷ்ராவதி நதியில் அமைந்துள்ளது இந்த அருவி. உலகின் மிக உயரமான அருவி எனப்படுவது 'ஏஞ்சல்'. இது தென் அமெரிக்கப் பகுதியைச் சேர்ந்த வெனிசுலாவில் உள்ளது. கரோனி (Caroni) ஆற்றில் அமைந்துள்ள அருவி இது. 1937ஆம் ஆண்டு ஜிம்மி ஏஞ்சல் என்பவர் இந்த அருவியைக் கண்டுபிடித்தார். அதனால் அவர் பெயரிலேயே இந்த அருவி 'ஏஞ்சல்' என்று குறிப்பிடப் படுகிறது. இதற்கடுத்த இடத்தைப் பெறுவது, இத்தாலியில் உள்ள மர்மோர் (Marmore) அருவி.

பொதுவாக, அருவிகள் இயற்கை

பெருகும்



அட, அப்படியா?

அற்புதம்தான். ஆனால், செயற்கையாக அமைக்கப்பட்ட அருவியும் உண்டு. சிங்கப்பூரில், ஜுரோங் பறவைகள் பூங்கா (Jurong Bird Park)வில் அமைக்கப்பட்டுள்ள அருவி, செயற்கையாக உருவாக்கப்பட்டது. இந்த வகையில், உலகின் உயரமான அருவி என்றும் இது பெயர் பெற்றுள்ளது. ஜுரோங் பூங்காவில் உள்ள பறவைகளின் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது இந்த அருவி.

கிளிகள், ஃப்ளமிங்கோ, ஹார்ன்பில் (hornbill), கழுகு, ஃபால்கன், ஆஸ்ட்ரிச், வாத்துகள், பெங்குயின், ஈமு என்று அறுநூறு வகையான எட்டாயிரம் பறவைகளுக்குமேல் இங்கு காணப்படுகின்றன. மிகச் சிறந்த சுற்றுலாப் பகுதிக்கான விருதை பலமுறை வென்றிருக்கிறது இந்த ஜுரோங் பறவைகள் பூங்கா. செயற்கையாக - அருவி உருவாக்கியிருப்பதில் அறிவியலின் வெற்றி, ஆச்சரியம் தருகிறது. அதோடு, பறவைகளின் வாழ்வும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. 'அறிவியல், இயற்கையைச் சீண்டி சிதைக்கக் கூடாது. மாறாக, இயற்கையை - உயிர்களை, பாதுகாக்கவும் பராமரிக்கவும் பயன்படவேண்டும்' என்பார்கள் அறிஞர்கள். அந்தவகையில் ஜுரோங் அருவி, மனித அன்பின் வெளிப்பாடாகப் பெருகிக் கொண்டிருக்கிறது.

- ப.ஜனனி, 12ஆம் வகுப்பு,
திருவள்ளுவர் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, புதுச்சேரி.

அன்பு!





பழங்கள், விதைகள், கொட்டைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்பவை அணில்கள். இவை பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவை. இவற்றின் பற்கள் வேகமாக வளரக் கூடியவை. அதனால்தான், அணில்கள் எதையாவது கொறித்துக் கொண்டே இருக்கும். இல்லாவிட்டால், பற்கள் வளர்ந்து வாயை அடைத்து விடும். அதனால், பட்டினியால் இறக்கும் ஆபத்து அணிலுக்கு ஏற்படும்!

இந்த அணில்களில் ஒரு வகை, ாம்பல் நிற அணில். இது தமிழகத் ில் ஸ்ரீவில்லிபுத்தூரின் அருகில் உள்ள செண்பகத்தோப்பு குதியில் காணப்படுகிறது. இந்த அணில்களைப் பராம ப்பதற்காகவே, இங்கே ஒரு சரணாலயம் அமைந்துள்ளது. சுமார் 30 ச.கி.மீட்டர் பரப்பளவு கொண்டது இந்தச் சரணாலயம். 1989ஆம் ஆண்டு மைக்கப்பட்ட இந்தச் சரணாலயத்தில் உள்ள மரங்களில், கூடு கட்டி வாழ் ின்றன அபூர்வமான சாம்பல் நிற அணில்கள். உடல் முழுதும் அடர்ந்த சாம் ல் நிற ரோமங்களைக் கொண்டதாக இவை காணப்படுகின்றன. எடை ஒன்று தல் ஒன்றரை கிலோ. சராசரியாக எண்பது செ.மீ. நீளம் உடையவை. இவற் ின் கால்களில் கூர்மையான வளைவுடைய நகங்கள் காணப்படுகின்றன. ரத்தில் இருந்து விழாமல் பற்றிக் கொள்ள இவை உதவுகின்றன. தாவும்போது டலைச் சமநிலைப்படுத்திக் கொள்ள வாலைப் பயன்படுத்துகின்றன. கொடி ள், காய்ந்த குச்சிகள், தேங்காய் நார் முதலியவற்றைக் கொண்டு கூடுகளை மைக்கின்றன. 35 முதல் நாற்பது நாட்களில் குட்டிகள் பிறக்கின்றன. வற்றின் ஆயுள்காலம் சுமார் பதினான்கு ஆண்டுகள்.

இந்த அணில்களிடம் ஆச்சரியப்படத்தக்க விஷயம் இவற்றின் உணவு நேரம். காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், பிறகு மதியம் மூன்று முதல் ான்கு மணி வரையிலும்தான் என்பதே. மற்ற நேரங்களில் கூட்டில் ஓய்வெடுக்கின்றன என்கிறார்கள். மரங்களில் இவை கூடு கட்டும் என்றாலும், ுளி, வாகை, நாவல், நீர் மருது, வேம்பு, மா முதலியவை இவற்றுக்கு விருப்பமான மரங்கள்.

அணில்கள் சரணாலயம் என்று சொன்னாலும், செண்பகத்தோப்பில் ிங்கவால் குரங்கு, லாங்கூர்(langur), புள்ளி மான், யானைகள், சிறுத்தைகள்

கொறிப்பது பலம்!

ன்று பல விலங்குகள் வாழ்கின்றன. 200 வகையான பறவை இனங்கள், 56 வகையான வண்ணத்துப்பூச்சிகள், ராஜநாகம் உட்பட பதினாறு வகையான ஊர்வன வகை உயிரினங்கள் இங்கே வாழ்வதாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் பெருமை சேர்ப்பது கோபுரம் மட்டுமல்ல; இந்த அணில்கள் சரணாலயமும் தான்! அடுத்தமுறை ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றால், இந்தச் சரணாலயத்தையும் பார்த்து மகிழுங்கள்.

– விருதை ராஜா, விருதுநகர்.

நெடுங்கவிதை

எங்கள் வீட்டு வெள்ளைச் சுட்டி!

சுவரோரம் பூனைக்குட்டி
சுவைக்குதொரு வெல்லக்கட்டி
தவறாமல் பாலைக்கொட்டி
தாவிச்செல்லும் வெள்ளைச்சுட்டி

வெள்ளை நிறம் மேனியிலே
வெளிர் சாம்பல் தாடையிலே
நல்ல கறுப்பு மூக்கினிலே
நலிந்த சிவப்பு நாக்கினிலே

குடும்பத்தோடு வாசலிலே
கூடிநிற்கும் வேளையிலே
அடுப்பங்கரைப் பானையிலே
ஆட்டம் போடும் பூனையாரே

கறுப்பு வெள்ளை வாலையாட்டி
கனவுபோல உள்ளவந்து
பருப்பு டப்பா மேலேயேறி
பால்வாளிய தட்டிவிட்டு

பானையோரம் ஒளிஞ்சிருக்கும்
பால்வழிய பார்த்திருக்கும்
காணயாரும் வருவாங்கன்னு
கவனமோடு காத்திருக்கும்

யாரும்வர வில்லையென்று
இடுக்கு வழியே பார்த்துவிட்டு
தேருபோல அசைந்து வந்து
தேங்கிநிற்கும் பாலைக்கண்டு

பரவசமாய் நா சுழட்டி
பக்குவமாய் நக்கிவிடும்
தரைவசமாய் இருந்த பாலை
துடைத்தெடுத்த பின்னாலும்

வழிப்பாதை பார்த்தபடி
வாளிமுழுக்கக் கவிழ்த்துவிடும்
வழியும் பாலைக் குடித்துவிட்டு
வாசப்படியில் படுத்திருக்கும்


அம்மா வந்தா ஓடிவிடும்
அப்பா வந்தா பதுங்கிவிடும்
அண்ணா வந்தா ஆடிவரும்
அக்கா வந்தா தாவிவரும்

எலி பிடிக்க ஓடினாலும்
என்னைக் கண்டா தாவிவரும்
வலி மறக்கும் சேட்டைகளால்
வந்தாடும் சின்னக்குட்டி.

...சகா...




கோகுலம் டைஜஸ்ட்



இந்த டைஜஸ்டில்...



புகையின்றி எரியும் புதர் எண்ணெய்!



ஹோஹோபா (Jojoba) என்பது பாலைவனப் புதர்ச்செடி. இலையுதிராத் தாவரம் இது. கலிபோர்னியாவிலுள்ள ஸோனோரன் (sonoran) பாலை வனமே இதன் தாயகம். அரிஸோனா, மெக்ஸிகோ முதலான பகுதிகளிலும் இது காணப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க் கொழுப்பு, திமிங்கலத்திலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைப் போலவே உள்ளது.



இந்தச் செடி கட்டாந்தரையிலும், ஓரளவு வறண்ட நிலப்பரப்பிலும் வளரக்கூடியது. 2 முதல் 2.4 மீட்டர் வரை வளரும். ஏராளமான கிளைகளும், தோல் போன்ற இலைகளும் கொண்டது. பயிரிடப்பட்டு மூன்று, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஆண் செடி, பெண் செடி இரண்டிலுமே தனித்தனியாக மலர்கள் தோன்ற ஆரம்பிக்கும். இந்த மலர்களுக்கு அல்லி வட்டம் கிடையாது.

பெண் செடியின் மலர்கள் முதிர்ந்து ஒன்று முதல் மூன்று விதைகள் வரை கொண்ட கனியாக மாறும். ஒவ்வொரு செடியும் ஏறக்குறைய பத்து கிலோ விதைகளை உற்பத்தி செய்யும்.

விதைகளின் எடையில் 40 முதல் 60 சதவிகிதம் வரை எண்ணெய்ச் சத்து அடங்கியிருக்கும். இதை எண்ணெய் என்பதைவிட, திரவ மெழுகு என்றே சொல்லலாம். இந்த எண்ணெய் எப்போதுமே கெட்டுப் போகாது. இதற்கு வாசனை கிடையாது. இதை எரிய வைத்தால், புகை இல்லாமல் பிரகாசமாக எரியும். மேலும் நச்சுத் தன்மையோ, சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும்



தாவரம்

தன்மையோ இதற்குக் கிடையாது.


தொழிற்சாலைகளில் மசகுப் பொருளாகவும், ஒப்பனைப் பொருள்கள் செய்வதிலும், பூச்சி விரட்டி மருந்துகளிலும் மெழுகுப் பொருள்கள் செய்வதிலும், தோல் பதனிடுவதிலும் மருந்துப் பொருள்கள் செய்யவும் இந்த எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் எடுத்த பின் எஞ்சிய புண்ணாக்கு, கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப் படுகிறது. இந்தப் புண்ணாக்கில் 35 சதவிகிதம் புரதம் உள்ளது.

ஹோஹோபாவின் தாவரவியல் பெயர் ஸிம்மோண்ட்ஸியா சைனென்சிஸ் (Simmondsia Chinensis) இது பாக்ஸாஸியே (Boxaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது



ஔவையின் பாட்டு. அதுபோல, எவ்வளவு முறை சூடு படுத்தினாலும், இந்த எண்ணெயும் கெட்டுப் போகாது; அதன் குழைம நிலையும் மாறாது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

-எஸ்.சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்




இங்குள்ள படத்துக்கு
வண்ணம் தீட்டி மகிழுங்கள்

தெரியுமா?



ஆராச்சியே உயிர் மூச்சு!





✱ 'உயிரினங்கள் வாழ்வதற்குப் பிராணவாயு தேவை' என்று கண்டறிந்தவர் இவர்.

✱ இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர், கி.பி.1733ஆம் வருடம் மார்ச் மாதம், பிரிஸ்டல் (Bristol) என்னுமிடத்தில் பிறந்தார்.

✱ ஃப்ரெஞ்ச், இத்தாலியன், ஜெர்மன், சிரியன் மற்றும் அரபி உள்ளிட்ட பல மொழிகளையும் படித்தவர்.

✱ தொழிலதிபரான ஜான் வில்கின்ஸனின் சகோதரியான மேரியை, 1761ஆம் ஆண்டு இவர் மணந்தார்.

✱ ஒரு பொருள் எரியும்போது, அது எரிவதற்குப் பிராணவாயுவை எடுத்துக் கொள்கிறது. உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு பிராணவாயுவை சுவாசிக்கின்றன. இந்த இரண்டு முடிவுகளும் அவர் ஆழ் மனத்தில் பதிந்தன. அதன் விளைவாக, வாயுக்கள் தொடர்பான ஆய்வில் தொடர்ந்து ஈடுபட்டார்.

✱ 'நிலக்கரியோ, பெட்ரோலோ ஏதாவது ஒன்று எரியும் போது அவை முழுவதுமாக எரிந்து தீர்ந்து போவதற்குரிய ஆக்ஸிஜன் கிடைக்காவிட்டால், அதிலிருந்து கார்பன் மோனாக்ஸைடு என்ற வாயு உண்டாகிறது' என்பதையும் கண்டறிந்தார்.

✱ 'நைட்ரஸ் ஆக்ஸைடு' என்ற வாயுவைக் கண்டுபிடித்தவர் இவரே. இந்த வாயுவை மோந்து பார்த்தால், அது சிரிப்பை வரவழைக்கும்.

✱ இவர் கி.பி.1804 ஆம் வருடம், பென்சில்வேனியாவில் காலமானார்.

✱ இவரை கௌரவிக்கும் விதமாக, அமெரிக்க வேதியியல் கழகம், தான் அளிக்கும் உயரிய பதக்கத்துக்கு இவர் பெயரை வைத்துள்ளது.

-எம்.ஜி. ரஞ்சித்குமார்,
உ.எண். 1418, திருப்பூர்

விடை: ஜோசப் ப்ரீஸ்ட்லி (Joseph Priestly)

நகர வாழ்வுக்குப் பழகிவிட்ட பலரும் அறியாத பறவை செம்போத்து. இதை 'குக்கில்' என்று குறிப்பிடுகிறது சூடாமணி நிகண்டு. ஆங்கிலத்தில் crow pheasant என்கிறார்கள். பறவைதான் என்றாலும், இவை வெகுதூரம் பறக்காது. கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கோ, தரையருகே உள்ள தாழ்ந்த மரக்கிளைக்கோதான் பறக்கும். கள்ளிப் புதர்கள், தென்னந் தோப்புகள் உள்ளிட்ட நிழல் படர்ந்த பகுதிகளில் இவை காணப்படும். தரையில் தத்திச் சென்று புழு, பூச்சிகளை இரையாக்கிக் கொள்ளும். மழை பெய்து ஓய்ந்த மதிய வேளையில் 'குகுக்' 'குகுக்' என்று குரலெழுப்புவது இதன் வழக்கம்.



✱நீர்க்கோழி

அரிய பறவையினம் ஒன்றை சமீபத்தில் அருணாசலப் பிரதேசத்தில் கண்டிருக்கிறார்கள் பறவை ஆர்வலர்கள். அசப்பில், நம் ஊர்ப்புறங்களில் காணப்படும் சிறிய குருவி போன்றே காணப்படும் இந்தப்பறவை, மத்திய சீனாவில் உள்ள மலைப்பகுதியில்- குறைந்த அளவில்,வசிக்கும் liocichla எனும் குருவி இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். இந்தப்பறவை இனத்தில் 14 மட்டும்தான் இருக்கின்றன என்கிறது ஆய்வு முடிவு. இதற்கு Bugun Liocichla என்றும் பெயரிட்டிருக்கிறார்கள்.



✱செம்போத்து

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் பாடும் பறவை ஒன்றைக் கண்டறிந்திருக்கிறார்கள். இந்தப் பறவை 'ரீட்' இனத்தைச் சேர்ந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்கள். போபோலின்க் (bobolink) என்றும், dolichonyx orzivorus என்றும் சொல்லப்படுபவை 'ரீட்' இனத்தின் பறவைகள். விதைகளையும், சிறு பூச்சிக்களையும் உணவாகக் கொள்ளும் இந்தப் பறவையினம், ஒரே நாளில் சுமார் 180 கி.மீ. வரை பயணிக்கிறது என்றும் வியக்க வைக்கிறார்கள்.

தாமரை இலையின் மீது அனாயாச



மாக நிற்கும் இந்தப் பறவை நீர்க்கோழி. சீனாவின் தென்பகுதி, இந்தோனேஷியா, இந்தியா, ஸ்ரீலங்கா உள்ளிட்ட ஆசியப் பகுதிகளைச் சேர்ந்தது இது. பூச்சிகள், மீன்கள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும் இந்தப்பறவையின் வயிற்றுப் பகுதி முதல் கழுத்தின் கீழ்ப்பகுதி வரை வெண்ணிறமாகக் காணப்படும். மேல்பகுதி அடர் நிறத்தில் இருக்கும். இந்தப்பறவையை, சிங்கள மொழியில் korawakka என்று குறிப்பிடுவார்கள்.


ஆசியாவின் தென்பகுதியில் காணப்படும் பறவை பனங்காடை, அடர்த்தி குறைந்த காடுகள் மற்றும் புல்வெளிகளில் காணப்படும் இந்தப் பறவையை கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்கள், தங்கள் மாநிலப் பறவையாக அறிவித்துள்ளன. தவளைகள், பூச்சிகள், சிறு ஊர்வன ஆகியவற்றை உணவாக கொள்ளும். இவற்றின் உடலில், நீலம் கலந்த பச்சை, பழுப்பு, ஊதா, இளநீலம் என்று வண்ணக் கலவையே அமைந்திருக்கும். அப்ப, கலர்க் களஞ்சியம்னு சொல்லலாமா?

ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ.எண். 1382,
கோபி

கலர் களஞ்சியம்!



✱ பனங்காடை



✱ Bugun Liocichla






என்.எஸ். கணேஷ், பத்தாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக் பள்ளி,
நம்பியூர்.

உங்கள் கை

தா.பவித்ரா, ஏழாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக் பள்ளி,
நம்பியூர்.

ஈ.சங்கவி, ஏழாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக் பள்ளி,
நம்பியூர்.





எஸ். சஞ்சய். எட்டாம் வகுப்பு.
செட்டிநாடு வித்யா மந்திர். கரூர்.




எம். பி. கீர்த்தன்.
எட்டாம் வகுப்பு.
செட்டிநாடு வித்யா
மந்திர். கரூர்.

வண்ணம்!



சேக் அப்துல் அஸீம்.
பதினொராம் வகுப்பு.
செ.க.பா.மு.ஷ்ரீ. அரசு
மேல்நிலைப் பள்ளி, ஏர்வாடி.

செ.நிஷாந்த்.
எட்டாம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி.
திருவந்தவார்.






கவலையாய் இருந்த மதனைப் பார்த்தார் அவன் அப்பா. எதனாலோ அவன் மனம் தடுமாறுவது போலத் தோன்றியது. 'அவனுக்கு படிப்புல கவனம் இல்லை. சும்மா புத்தகத்தை வைச்சுக்கிட்டு உட்கார்த்திருக்கான்' என்று மனைவி சொன்னது நினைவுக்கு வந்தது.

எழுந்து அவனருகே சென்று அமர்ந்தார். ''என்னப்பா?'' என்றபடியே, அவன் தலையை வருடினார். அவ்வளவுதான். மதன் 'ஓ'வென்று அழுதான். அவனைத் தட்டிக் கொடுத்து, ஆறுதல் படுத்திய நிலையில், அவன் மனநிலை புரிந்தது அவருக்கு.

'படிப்பது என்ன என்று புரியாத நிலையில், அவனால் பாடங்களை நினைவுபடுத்த முடியவில்லை. அதனால்தான் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண் பெறுகிறான்' என்று உணர்ந்தார். அதனால், மென்மையாகப் பேச ஆரம்பித்தார்.

''மதன், எனக்கும் உன்னை மாதிரி பிரச்னை இருந்தது. அப்போ என் ஆசிரியர் சொன்னார்: 'எது புரியலையோ, அதை திரும்பத் திரும்பப் படி.... அப்படிப் படிச்சதை எழுதிப் பாரு. ரொம்பக் களைப்பா உணர்ந்தா, கொஞ்ச நேரம் நட. திரும்ப வந்து படி. நிச்சயமாப் புரியும். அதுக்கும் மேல புரியலைன்னா, என்கிட்டே கேளு. நான் சொல்லித்தரேன். ஏன்னா, மனசு ரொம்ப சீக்கிரம்

பெற்றோரும் கவனிக்க...



சலிப்படையும். அப்படி விடக்கூடாது. திரும்பத் திரும்ப முயற்சி செய். அதனால, மனசுல ஊக்கம் உண்டாகும். அதுதான் உன் ஆற்றலை அதிகப்படுத்தும்'னார். அதையேதான் நான் உனக்கும் சொல்றேன். முடியாது, புரியாதுன்னு நினைக்காதே. முயற்சி பண்ணு. உன்னால முடியும்.''

முதல் மாணவன்!

அப்பாவின் அமைதியான இதமான பேச்சு மதனை ஈர்த்தது... கவனமாகப் படிக்க ஆரம்பித்தான். எழுதிப் பார்க்க ஆரம்பித்தான். அவன் நடவடிக்கைகளில் மாற்றம் தென்பட்டது. அதை அறிந்தாலும், அம்மாவும் அப்பாவும் எதுவும் சொல்லவில்லை.

அதிகாலையில் எழுந்து படித்தான்; இரவில் கண் விழித்தும் படித்தான். இரவில் அப்பா அவனுடன் கண் விழித்தார். டீ போட்டுக் கொடுத்தார். அதிகாலையில் அம்மா எழுந்தார்; மகனுக்குத் துணையாக இருந்தார். தனக்காகத்தான் அவர்கள் கண் விழிக்கிறார்கள் என்று மதனுக்கும் புரிந்தது. அந்த அன்பு, அவன் கவனத்தை மேலும் அதிகப்படுத்தியது. அதன் விளைவு, ரிவிஷன் டெஸ்ட்களில் அவனுடைய மதிப்பெண்கள் ஆச்சரியப்பட வைத்தன. பள்ளியின் முதல் மாணவன் அவன் என்பது அதைவிட ஆச்சர்யம்.

பொதுத் தேர்வை அச்சமில்லாமல் எதிர் கொண்டான் மதன். தான் எழுதிய குறிப்புகளைப் பார்த்துக் கொண்டான். நிதானமாகவும் தெளிவாகவும் எழுதினான். தேர்வு முடிவுகள் வெளிப்பட்டன. பள்ளியின் முதல் மாணவனாக வருவான் என்று எதிர்பார்க்கப்பட்ட மதன், மாநிலத்தின் முதல் மாணவனாக வென்றிருந்தான். 'எப்படி இதைச் சாதித்தீர்கள்?' என்று அவனிடம் நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு மதன் சொன்னான் :

''இது என் வெற்றி அல்ல; எனக்குத் துணிவூட்டிய அப்பா, துணைநின்ற அம்மா, வழிகாட்டிய ஆசிரியர்கள் ஆகியோரின் வெற்றி.'' அதைக்கேட்ட அவன் தந்தை புன்னகைத்தபடியே சொன்னார்: ''இல்லை மதன்; இது பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உண்டான கடமை. அதை நீ உணர்ந்தாய் என்பதால், இது உன்னுடைய வெற்றிதான்!''

அதை ஆமோதித்ததுபோல, அனைவரும் கரவொலி எழுப்பினார்கள்.

- பா.திவ்யலக்ஷ்மி, எட்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

வழி காட்டுங்கள்



எலி தப்பிக்க வழி காட்டுங்கள்!

புத்திசாலி முயல்!

கதை : அருண்பாலாஜி, உ.எண் 1651, கும்பகோணம் படம் : பிள்ளை





உருகும் பணியாரம்!

I

1. 'போ' என்கிறது ஒருநாடு. 'வா' என்கிறது ஒரு ஊர்? அவை என்ன?

2. இரு குதிரைகள் மீது ஒரு ராசா!

3. அட்டைக்கரி பெண் ணுக்கு உச்சந் தலை மஞ்சள். அது எது?

4. பாட்டுப் பாடும்; குயில் அல்ல; ஊசிபோடும், டாக்டர் அல்ல - இது என்ன?

5. கொம்பு இரண்டுண்டு; மாடல்ல. வேகமாய் ஓடும்; மானல்ல. கால்கள் உண்டு; மனிதனல்ல... இது என்ன?

6. இடி இடிக்கும்; மின்னல் மின்னும். மழை பெய்யாது - அது என்ன?

7. காய் காய்க்கும்; பூ பூக்கும்; இலை இல்லை - அது என்ன?

8. ஓடு ஏந்தியவன்; பிச்சை எடுக்கமாட்டான் - அவன் யார்?

9. ஓட ஓட வால் நீளம் குறையும் குதிரைக்கு - அது என்ன?

பி.பரத், உ.எண்:1257, கோவிலாம்பூண்டி

II

1. உடலெல்லாம் புள்ளி; நடமாட்டம் புல்வெளி - இவன் யார்?

2. வெளிச்சமும் தருவான்;

கண்ணையும் பறிப்பான் -
இவன் யார்?

3. நீரால் பிறப்பான்;
நீராய் மறைவான்; இவன் யார்?

4. முள்ளுண்டு; குத்தாது;
காலில்லை; சுற்றும்! - இது என்ன?

5. காற்றுக்கு அடங்காது;
நீருக்கு அடங்கும்! - அது என்ன?

முகமது அசாருதீன், எட்டாம் வகுப்பு,
சுவாமிநாதா உதவிபெறும் நடுநிலைப்பள்ளி, சுவாமிமலை

III

1. வழியெல்லாம் துணையாவான்; வீட்டுக்குள் வரமாட்டான் - அவன் யார்?

2. ஓய்வில்லா உழைப்பாளி;
ஓய்வெடுத்தால் உயிரில்லை - இவன் யார்?

3. கைதட்டல் இல்லையென்ற கவலை
இல்லாமல் காலமெல்லாம் பாடுகிறாள் - இவள் யார்?

4. கையிலே கடிவாளம்; காற்றிலே

விடுகதைகள்

குதிரை - அது என்ன?

அ. அபிராமி, ஏழாம் வகுப்பு
உ.எண்-54, ஊ.ஒ.ந.நி.பள்ளி, திருப்புலிவனம்

IV

1. உரிக்க சருகு சேலை
ஊறும் கண்ணில் நீரே - அது என்ன?

2. தொட்டா அலறுவான்;
துணைக்கு ஆளை அழைப்பான் - இவன் யார்?

3. வெள்ளை வெள்ளைப் பணியாரம்;
வெய்யில் பட்டால் நீராகும் - அது என்ன?

4. கொடியாய் வளையும்; வேரில்லை
நொடியில் ஓடும்; காலில்லை - அது என்ன?

அ. அனுசுயா, உ.எண்: 110,
ஊ.ஒ.தொ.பள்ளி, திருப்புலிவனம்

விடைகள்:

I

1.'போ'லந்து, 'வா'லாஜா 2. செருப்பு 3. பனம்பழம் 4. கொசு 5. சைக்கிள் 6. பட்டாசு, 7. சப்பாத்திக்கள்ளி, 8. ஆமை, 9. ஊசி நூல்

II

1. புள்ளிமான் 2. மின்னல் 3. பனிக்கட்டி 4. கடிகார முள் 5. நெருப்பு

III

1. செருப்பு 2. இதயம் 3. குயில் 4. பட்டம்

IV

1. வெங்காயம் 2. காலிங்பெல் 3. வெண்ணெய் 4. பாம்பு




கோகுலம்
டிசம்பர் 2010
தீபிகா குமாரி




சுஷில் குமார்



ககன் நரங்



ங்கங்கள்



ஆகாயத்தில் வாகனங்களை ஓட்டிச் சென்றால் எப்படி இருக்கும்? இந்தக் கற்பனையை நிஜமாக்கி இருக்கிறார்கள் ஃபிரான்ஸ் நாட்டினர்.

ஃபிரான்ஸின் மாசிஃப் மத்திய மலைப் பகுதிகளில் (massif central mountain) உள்ள Tarn நதியின் மேலே 2.5 கி.மீ. தூரம் வரை வாகனங்கள் செல்வதற்காக பாலம் அமைக்கப்பட்டுள்ளது இதனால் எரிபொருள் செலவும், பயண நேரமும் மிச்சம். ஏழு தூண்களைக் கொண்டு 1,125 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம். அதாவது, ஈஃபில் டவரை விட 53 அடி அதிகம். வாகனங்கள் செல்லும் உயரம் 885 அடி.

இவ்வளவு உயரத்தில் இருக்கும் இந்தப் பாலத்தைக் கடக்கும் போது மிக உற்சாகமாகவும், மேகங்களைத் தழுவிக் கொண்டு வானத்தில் பறப்பது போலவும் இருக்கிறது என்று பயணிகள் சிலிர்க்கிறார்கள்.

பாலத்தைப் பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஃபிரான்ஸ் நாட்டின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளை இந்தப் பாலம் இணைக்கிறது.


பாலத்தை உருவாக்க முப்பத்தொன்பது மாதங்கள் தேவைப்பட்டன. 520 மில்லியன் டாலர் இதற்குச் செலவானது என்கிறார்கள்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஃபாஸ்டர் + பாரிட்னர்ஸ் என்ற நிறுவனம்தான்

மலைகளை



இணைக்கும் வான்வீதி!



இதனை வடிவமைத்தது. லண்டனில் உள்ள மில்லெனியம் பாலம், சிடி ஹால், சிங்கப்பூரின் புதிய சுப்ரீம் கோர்ட் கட்டடம் உள்ளிட்ட புகழ்பெற்ற கட்டடங்களை வடிவமைத்தவர்களும் இவர்கள் தான்.

மணிக்கு 250 கி.மீ. வேகத்தில் காற்று வீசினாலும், ஊஞ்சல்போல சற்றே ஆடி தாங்கிக் கொள்ளும் அமைப்புடையது இந்த வான்வீதி! அதேசமயம், இப்பகுதியில் வீசும் சூறாவளிக் காற்று, வாகனங்களைத் தூக்கிச் செல்லாமல் தடுக்கும் வகையில், பாலத்தின் இருபுறமும் Transparent Screen Stand பொருத்தப் பட்டுள்ளது.

இந்தப் பாலத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரும்புச் சாதனங்களின் எடை 40,000 டன்கள். இதைக் கொண்டு ஐந்து ஈஃபெல் கோபுரங்களைக் கட்டிவிடலாம் என்றும் சொல்கிறார்கள். டார்ன் நதியின் நீரோட்டம்; காற்றின் வேகம் எல்லாவற்றையும் எதிர்கொள்வேன் என்பது போலச் சிரிக்கிறது ஃபிரான்ஸிலுள்ள இந்த வான்வீதி!


- ஹாஜா தவ்பீக்,
பதினொராம் வகுப்பு, எல்.கே. மேல்நிலைப்பள்ளி
காயல்பட்டினம்



சுட்டீஸ் கைவண்ணம்!



பி. லாவண்யா.
ஐந்தாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக்
பள்ளி. நம்பியூர்.



மம்தா மணிமாறன்.
ஐந்தாம் வகுப்பு
பாலகிருஷ்ணா
மெட்ரிக் பள்ளி.
வடக்கன் குளம்.



என். அனுஸ்ரீயா. ஐந்தாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக் பள்ளி. நம்பியூர்.



ஜ. ராக்லண்ட ஜெரமையா பிரேம்.
மூன்றாம் வகுப்பு
எஸ்.டி.ஏ. மெட்ரிக் மே.நி. பள்ளி.
பெரியகுளம்.



ஆர். பிரவின்.
ஐந்தாம் வகுப்பு
காமராஜ் மெட்ரிக் பள்ளி.
நம்பியூர்.



போலீஸ் என்பது, வழக்கு மொழியாகிவிட்ட ஆங்கிலச் சொல். காவல்துறை என்று பொருள்படும் இந்தச் சொல், கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானது. 'போலீஷ்யா' (Politeia) என்னும் கிரேக்க மொழி வார்த்தைக்கு 'பாதுகாத்தல்' என்று பொருள். அதுதான், ஆங்கிலத்தில் போலீஸ் என்று உருப்பெற்றுள்ளது.

நூலகம் என்பதை, ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்று சொல்கிறோம். இது லத்தீன் மொழியில் இருந்து உருவான சொல். லத்தீன் மொழியில் 'லைபர்' என்ற சொல்லுக்கு 'புத்தகம்' என்று பொருள். புத்தகங்கள் பலவற்றையும் சேமித்துள்ள இடம் என்பதால், 'லைப்ரரி' என்ற சொல் உருப்பெற்றது.





மேடு, பள்ளம் என்று எல்லாப் பகுதிகளிலும் செலுத்த ஏதுவான வாகனம் ஜீப் (jeep). இரண்டாம் உலகப்போர் சமயத்தில் எல்லாப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது இந்த வாகனம். அதனால் ஜெனரல் பர்பஸ் (general purpose) என்று சொல்வதைச் சுருக்கி ஜீ.பி. என்று கூறினர். அதுவே, நாளடைவில் ஜீப் என்றாகிவிட்டது.



பலப்பல நிறங்களில் எழுதுவதற்கான, படம் வரைவதற்கான பென்சில்களை நாம் உபயோகிக்கிறோம். 'Penicillus' என்னும் லத்தீன் சொல்லில் இருந்து உருவானது பென்சில் என்ற பெயர். அதற்கு 'குட்டி வால்' என்று பொருள். என்ன? சின்ன வாலா? பென்சிலா? அதைப் பயன் படுத்தும் சுட்டிகளா?

ஆர்.பிரசன்னா, ஹூப்ளி

வெற்றிக்கு வழி!

வேர் மூலம் நீர் பருகி
வாழும் பயிர்கள்!
வான்மழையால் நிலமகளின்
வறட்சி நீங்கும்.

வறுமையெனும் தாகத்தைக்
கொடையே போக்கும்;
பசியென்னும் தாகத்தை
உணவே நீக்கும்;

கலைஞானம் என்பதெல்லாம்
தாகத் தேடல்!
விலையில்லா அனுபவங்கள்
அளிக்கும் பாடல்!

இறையுணர்வு தாகத்தால்
ஞானம் தோன்றும்;
இரவுபகல் பயிற்சிகளால்
முளைக்கும் வெற்றி.

தாகம்தான் வளர்ச்சிக்கு
வித்தே ஆகும்;
தாகமுடன் படித்தோர்க்கே
வெற்றி வாய்க்கும்!

- ஆர்.மீனா,
உ.எண் : 1614, காஞ்சிபுரம்

யானைப் பாடம்!


காது ரெண்டும் விசிறியாம்;
நீண்ட மூக்கு சுழலுமாம்;
கால்கள் நான்கும் தூண்களாம்;
நடந்து செல்லும் குன்றுபோல்!

குட்டி யானை வருகுது;
கோவில் யானை வருகுது;
கணீரென்ற மணியொலி;
திசைபரப்பி வருகுது!

பெரிய தோற்றம் கொண்டது;
பார்க்க பயம் தோன்றுது;
கரிய மேனி கொண்டது;
கடவுள் தாங்கி வருகுது!

'பலம் மிகுந்த போதிலும்
பணிவு தேவை' என்பதைப்
பார்ப்பவர்க்குச் சொல்வதாய்
பவனி வருது யானையே!

- த. கவின், உ.எண்:1467,
நம்பியூர்



வாழ்த்தும்படி...

வாழ்வது நாம்தான்;
ஆனால் வாழும்
வாழ்க்கை பிறர்க்காக.
சூழ்வது இன்பம்;
என்றால் நம்மைச்
சூழ்பவர் நல்லோர்கள்.
வெல்வது நோக்கம்;
ஆமாம்; அதற்குப்
பயிற்சி தினம்தேவை
சொல்வது வாய்மை;
என்றால், நன்மை
ஜொலித்திடும் எந்நாளும்
அன்பைத் தூவ
அகமும் புறமும்
வெளிச்சம் உறவாகும்
அன்னை தந்தை
ஆசிகள் நமது
அழியா பலமாகும்
'வாழ்வோம்; பலரை
வாழ்விப்போம்' என
உறுதி மேற்கொள்வோம்!

'வாழ்வின் நோக்கம்
வாழ்த்தும் படியாய்
வாழ்தல்' என்றறிவோம்!

- ஏ. சுந்தரராஜன், உ.எண்: 1158,
திருக்கழுக்குன்றம்



துடுப்பாகும் வால்!


✸ 'தவளை கத்தினால் மழைவரும்' என்ற நம்பிக்கை நம் நாட்டில் மட்டுமல்ல; சீனாவிலும் உண்டு. அதன் சத்தத்தைக் கொண்டே, மழைவரும் நேரத்தையும் கணிக்கிறார்கள்; பயிர் செய்யவும் தொடங்கிவிடுகிறார்கள். சீனாவின் கிழக்குப் பகுதியில், இந்தப் பழக்கம் அதிகம்.

✸ நீர் யானைகளை இரண்டு வகையாகச் சொல்வர். சாதாரண நீர் யானை மற்றும் சைபீரிய நீர் யானை. மிகப் பருமனான தோற்றத்தைக் கொண்டவை என்றாலும், மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் ஓடக் கூடியவை நீர் யானைகள். இவற்றின் ஒரு வேளை உணவு சுமார் 45 கிலோ புல்!

✸ கோட்ஸ் பியர்டு







✸ பீவர்



✸ பாம்புகள்தான் விஷம் கொண்டவை என்று நினைக்கிறோம். ஆனால், அவற்றைவிட மீன்களில் விஷம் கொண்டவை அதிகம் என்கிறது ஆராய்ச்சி. சுமார் 1200 வகையான மீன்கள் விஷத் தன்மை கொண்டவை என்கிறது ஆய்வு முடிவு.

✸ கடல்வாழ் உயிரினங்களில் ஒருவகை கடல் முயல். மீன் இனத்திலேயே அதிக முட்டைகள் இடுவதும் இதுதான். பார்ப்பதற்கு முயல் தோற்றம் தருவதால் உண்டான பெயர் இது.

✸ பொதுவாக, சிங்கம் என்றால் விலங்குகள் பயந்து ஓடும். ஆனால், வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி ஆகியவை சிங்கத்திடம் சுலபத்தில் சிக்காது. தம் பின்கால்களால் வேகமாய் உதைக்கும். ஆஃப்ரிக்க மானும், காட்டெருமையும் தம் கூரிய கொம்புகளால் தாக்கும்.

✸ ஆஃப்ரிக்கப் பகுதியில் காணப்படும் பூச்செடி, கோட்ஸ் பியர்டு (Goats Beard). இந்த மலர் கொத்தாகத்தான் பூக்கும். ஒவ்வொரு கொத்திலும் பத்தாயிரம் மொட்டுகள் வரை காணப்படுமாம்.

கதம்பம்

✱ முந்திரியைப் பயன்படுத்தி விதவிதமான உணவு வகைகள் தயாரிக்கிறோம். இதன் தாயகம் பிரேசில். 1660ஆம் ஆண்டுதான், முதன்முதலில் நம் நாட்டில் முந்திரி அறிமுகமானது.

✱ தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் கருவியின் பெயர் ஸ்கியூபா (scuba).


✱ Phyllanthus Nirun என்ற தாவரவியல் பெயரைக் கொண்டது கீழாநெல்லி. இலையின் அடிக் காம்பில் காய்கள் காய்ப்பதால், இதை 'கீழ்க்காய் நெல்லி' என்று இதைக் குறிப்பிட்டனர். இதுவே 'கீழாநெல்லி' என்று வழக்கில் உருப் பெற்றுள்ளது.

✱ கொசுக்களில், கியூலெக்ஸ் (Culex) வகைக் கொசுக்கள் யானைக்கால் நோயை உண்டாக்குகின்றன; அனோஃபலிஸ் (Anofelis) வகையினால் மலேரியா உண்டாகிறது.

✱ இந்தியாவில் வளரும் விலை உயர்ந்த மரம் தேக்கு. கரையானால் அரிக்கப்பட முடியாத மரவகையில் இதுவும் ஒன்று.

✱ கொறிக்கும் விலங்கான பீவர், நீரிலும் நீந்தும் வல்லமை உடையது. தட்டையான இதன் வால், நீரில் நீந்த உதவுகிறது; துடுப்பு போலச் செயல் படுகிறது என்பதுதான் சிறப்பு!

✱ கீழாநெல்லி










✱ கியூலெக்ஸ்

- ந. பிருந்தா, உ.எண்: 1098.
மயிலாடுதுறை

கண்ணாமூச்சி

1 முதல் 55 முடிய புள்ளிகளை இணையுங்கள்!




புள்ளிகளை இணையுங்கள்

மாறியது மனம்!

கதை : சு.அபிஷேக், உ.எண் 518, சென்னை　　　படம் : பிள்ளை





மிகப் பெரிய நந்தி?

I கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கவனமாகப் படியுங்கள். அதில், பொருந்தாதது எது என்று கண்டுபிடியுங்கள்.

1. a.தென் அமெரிக்கா b. ஐரோப்பா c.ஆப்ரிக்கா d. ஆஸ்திரேலியா e. இலங்கை
2. a.காம்பீர் b. தெண்டுல்கர் c. தோனி d.உசேன் போல்ட் e. இர்ஃபான் பதான்
3. a. புலி b. மான் c. முள்ளம்பன்றி d. பூனை e. கரடி
4. a. திலகர் b. கோகலே c. பாரதி d. லால்பகதூர் சாஸ்திரி e. நேதாஜி
5. a. டென்னிஸ் b. ஃபுட்பால் c. கேரம்போர்டு d. ஹாக்கி e. வாலிபால்
6. a. அஸ்ஸாம் b. பஞ்சாப் c. நாகாலாந்து d. காஷ்மீர் e. ஷில்லாங்
7. a. கங்கை b. யமுனை c. சிந்து d. நர்மதை e. கோதாவரி
8. a. மும்பை b. பெங்களூர் c. ஹைதராபாத் d. போபால் e. செகந்தராபாத்

- அ.அருண்பாலாஜி, உ.எண்:1651, கும்பகோணம்

II கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒன்பது கேள்விகளின் பதில்கள் 'ல'கர வரிசை எழுத்துக்களில் தொடங்குகின்றன. எங்கே விடைகளைக் காணுங்கள்.

1. தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள நகரம் இது ---------------.

புதிர்கள்

2. தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய தலைவர் --------------------.

3. ஃபிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் ----------------.

4. உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி --------------------.

5. புத்தர் பிறந்த இடம் -----------------.

6. வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டுபித்தவர் -------------------.

7. உலகில் அதிக அளவு சிலை வடிவமைக்கப்பட்டவர் ----------------.

8. இந்தியாவிலேயே ஒரே கல்லாலான மிகப்பெரிய நந்தி உள்ள இடம் -----------------.

9. விண்வெளியில் பயணம் செய்த நாயின் பெயர் --------------.

- கி.சிந்து, உ.எண்: 786, பத்தாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை

III கீழே கேட்கப்பட்டிருக்கும் ஆறு கேள்விகளுக்கும் பதில்களின் முதல் எழுத்து 'வா'. எங்கே விடைகளைக் காணுங்கள்.

1. தமிழ்நாட்டின் முதல் நகராட்சி இது?
2. புகழ்பெற்ற கார்ட்டூன்களை உருவாக்கியவர் இவர்?
3. இங்க் பேனாவைக் கண்டுபிடித்தவர்?
4. 1911ல் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரையைச் சுட்டுக்கொன்றவர்?
5. இந்தியா, பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்தபோது, முதல் கவர்னர் ஜெனரலாக பொறுப்பு வகித்தவர்?
6. இந்தியாவுக்குச் செல்ல கடல்வழி கண்டுபிடித்த ஐரோப்பியர்?


- கி. பாலாஜி, உ.எண்: 657, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை

விடைகள்:

I. 1.e 2.d 3.d 4.d 5.c 6.e 7.c 8.e

II. 1. லண்டன் 2. லால்பகதூர் சாஸ்திரி 3. லில்லி 4. லீலாசேத் 5. லும்பினி 6. லூயி பாஸ்டர் 7. லெனின் 8. லேபாட்சி 9. லைகா

III. 1. வாலாஜாபேட்டை 2. வால்ட் டிஸ்னி 3. வாட்டர்மேன் (Lewis Waterman) 4. வாஞ்சிநாதன் 5. வாரன் ஹேஸ்டிங்ஸ் 6. வாஸ்கோடகாமா



ஷாக் அடிக்காதது ஏன்?

மின்சாரக் கம்பிகளில் அமரும் பறவைகள் ஏன் மின் அதிர்ச்சிக்குள்ளாகி இறப்பதில்லை?

மின்சாரத்தின் அடிப்படை அலகுகளாகக் கருதப்படுபவை மின்னோட்டமும், வோல்ட்டேஜ் எனப்படும் மின்னழுத்த அளவுமாகும். இவற்றுள் மின்னோட்டம் என்பது எலக்ட்ரான்களின் இடப்பெயர்ச்சியாகும். வோல்ட்டேஜ் என்பது எலக்ட்ரான்களை உயர் அழுத்தத்தில் இருந்து தாழ்ந்த அழுத்தத்துக்குச் செலுத்தும் மின்னழுத்த அளவாகும். இவற்றுள் மின்னோட்டமே அதிர்ச்சியளித்து உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடியது. ஒரே ஒரு மின் கம்பியில் பறவை அமரும்போது, அது கம்பியின் புவியிணைப்போ தொடரிணைப்போ பெறுவது இல்லை. எனவே, பறவையின் உடலில் மின்சாரம் பாய்வது இல்லை. அவ்வாறின்றி, பறவை மின்சாரம் செல்லும் இருவேறு கம்பிகளில் ஒரே நேரத்தில் அமர்ந்தால், ஒரு முழு மின் சுற்று உண்டாகி, பறவையின் உடலிலும் மின்சாரம் பாய்ந்து அதிர்ச்சிக்குள்ளாகி இறந்துவிடும்.



– ஜி. எஸ் கார்த்திக், கோபி



பூனைகளை உயரத்திலிருந்து போட்டாலும் பூமியில் கால் பதிந்தபடியே விழுகிறதே எப்படி?

பூனையின் உடல் அற்புதமான முறையில் வளையும் தன்மை உடையதாகும். நேர்த்தியான முறையில் உடலைச் சமநிலையில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. அதன் எலும்புகளின் அமைப்போ, உடலை எளிதில் வளைத்து நீட்ட ஏதுவாக உள்ளது. பூனை கீழே விழும்போது,

நடு வழியில் தன் உடலைத் திருப்பிக் கொள்கிறது. ஆகவே அது பூமியை அடையும்போது எப்போதுமே கால்கள் பதியும்படியே விழுகிறது. அதன் இடுப்பு, தோள்பட்டை, இணைப்பு ஆகியவை சுருள் கம்பி ஸ்பிரிங் நிலையில் உள்ளன. ஆகவே பூனை மிக உயரத்திலிருந்து விழுந்தாலும் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்கிறது.

காரணம்

டிராக்டர் வண்டிக்கு மட்டும் புகைபோக்கி முன் பக்கம் இருப்ப தேன்?

டிராக்டர் வண்டியில் என்ஜின் பகுதி ஏறக்குறைய எட்டு அடி நீளமுள்ளது. அதன் முன் சக்கரம் சிறியதாகவும், பின் சக்கரம் பெரியதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. கரடு முர டான பாதையிலும், காடு வயல்களிலும் செல்லுமாறு டிராக்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. பஸ், கார் முதலிய வாகனங்களில், என்ஜின் பகுதிக்கு மேலாக ஒரு தளம் அமைக்கப்பட்டு, ஓட்டுனரும், பயணிகளும் தளத்தின் மேல் உள்ள இருக்கையில் அமர்ந்து பயணம் செய்வர். என்ஜினிலிருந்து புகை தளத்துக்குக் கீழே வெளியேறும். இப்புகை யாரையும் தாக்காது. டிராக்டரில் இப்படிப்பட்ட பயணிகள் தளம் இல்லை. புகை கீழே வெளியேறினால், அது நேராக மேலெழுந்து ஓட்டுனரைத் தாக்கும். இதைத் தவிர்ப்பதற்காகவே, புகை போக்கி முன் பக்கத்தில் ஓட்டுனர் இருக்கைக்கு மேலே புகையைச் செலுத்தும்படி அமைக்கப்பட்டுள்ளது.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ.எண்.1382,
கோபி



மூளைக்கு வேலை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்





விடைகள்: 1. மழைத்துளி 2. தவளையின் கண் 3. சிறுமியின் உடை
4. காளானில் புள்ளி 5. தவளையின் விரல்

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டையில்!

1876 பி.கே.உதயகணேஷ், ஏழாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, முகப்பேர்.

1877 ப.ஜனனி, பதினொராம் வகுப்பு, திருவள்ளுவர் அரசுபெண்கள் மேல் நிலைப்பள்ளி, புதுச்சேரி-13

1878 எஸ்.கே.குமரகுருபரன், மூன்றாம் வகுப்பு, அம்மா மெட்ரிக் பள்ளி, புன்செய் புளியம்பட்டி.

1879 அ.கோபிநாத், பத்தாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப்பள்ளி, பெலாசூர்.

1880 சி.சிவசங்கரி, எட்டாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல் நிலைப்பள்ளி, பொன்னாபுரம்.

1881 எஸ்.கீர்த்தனா, ஆறாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, பொள்ளாச்சி.

1882 சி.செ.விக்னேஷ், பதினொராம் வகுப்பு, எம்.எஸ்.பி. சோலை நாடார் நினைவு மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல்-5.

1883 எஸ்.மார்டினா இன்பெண்ட், ஐந்தாம் வகுப்பு, ஆக்ஸிலியம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்-7.

1884 பி.ஹரிபிரசாத், மூன்றாம் வகுப்பு, ஆதி அபனா பள்ளி, விளாங்குடி.

1885 இர.ஹரீஷ், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீஞானானந்தா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருக்கோவிலூர்.

1886 இர.மோனிஷ், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீஞானானந்தா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருக்கோவிலூர்.

1887 ஜெ.கிருத்திகா, மூன்றாம் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், பல்லாவரம்.

1888 கே.எம்.மாதவன், நான்காம் வகுப்பு, மதுரா மெட்ரிக் பள்ளி, வெங்கலம்.

1889 வி.லி.ஜெரார்டு தனராஜ், ஐந்தாம் வகுப்பு, ஆர்.சி.எம்.தொடக்கப் பள்ளி, சென்னை-44.

1890 கு.நரேன்ராஜ், ஆறாம் வகுப்பு,



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் :..

வயது :..

பெற்றோர் பெயர் :..

வகுப்பு, பள்ளி :..

....

வீட்டு முகவரி :..

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

சாரு பதின்ம மேல்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம்.

1891 டி.பவதாரிணி, ஐந்தாம் வகுப்பு, பிரிட்ஜஸ் லேர்னிங் வித்யாலயா, புதுச்சேரி.

1892 ப.சுகந்தஸ்ரீ, நான்காம் வகுப்பு, மகாத்மா காந்தி நூற்றாண்டு பள்ளி, தென்னூர்.

1893 டி.சேக் அப்துல் அலீம், பதினொராம் வகுப்பு, எஸ்.ஏ.எம்.ஹெச். அரசு மேல்நிலைப்பள்ளி, ஏர்வாடி.

1894 ம.சரண்யா, ஆறாம் வகுப்பு, ஏ.கே.டி.அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி.

1895 கே.டி.நரேந்திரன், இரண்டாம் வகுப்பு, கே.எஸ்.ஆர் அக்ஷரா அகாடமி, திருச்செங்கோடு.

1896 கே.எம்.பவித்ராலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு, பி.எஸ்.பி.பி. உயர்நிலைப் பள்ளி, சென்னை - 78.

1897 ர.சாய் நாக சுனிதா, ஐந்தாம் வகுப்பு, பொன் வித்யாஷ்ரம், சென்னை-87.

1898 சோ. ரம்யா, ஒன்பதாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், ஒசூர்.

1899 லக்ஷ்மி எஸ். அய்யர், யு.கே.ஜி, கார்மல் ஸ்கூல், பெங்களூரு.

1900 க.மணிகண்டன், ஒன்பதாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம்.

நல்ல முயற்சி!

கதை கேளு... கதை கேளு..!
ஆசிரியர் : ஜானகி மணாளன்
வெளியீடு : கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளுதெரு, தியாகராயநகர்,சென்னை - 600 017. விலை ரூ.35/-

கதை என்றால், ராஜா, மந்திரவாதி, தேவதை, சூனியக்காரி... என்றெல்லாம் இருக்க வேண்டிய அவசியமில்லை. வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்வும் கதைதான். 'பின்கோடு' எதற்கு? அதன் பொருள் என்ன? ஒலிம்பிக், பாராலிம்பிக் என்பவை என்ன? அவை எப்போது ஆரம்பமாயின? இந்திய ஜனாதிபதிகள் பற்றித் தெரியுமா? அஞ்சல் அட்டை எப்படி உருவானது? நோபல் பரிசு எப்படி ஏற்பட்டது? 'சாக்லெட்'டை யார் கண்டுபிடித்தார்கள்... இப்படி ஒற்றைவரிக் கேள்வியை எழுப்பிக் கொண்டு படிக்க ஆரம்பித்தால், பதில்கள் கொட்டிக்கிடக்கின்றன. 'நமக்குத் தெரிந்தவை' என்று சொல்வதைப் பற்றி, நாம் அறிய வேண்டியது அதிகம் என உணர்த்தும் நூல்!



திருக்குறள் சார்ந்த சுவையான சிறுகதைகள் :
ஆசிரியர் : லிடியா ரஞ்சன் வெளியீடு : மணிமேகலை பிரசுரம், த. பெ. எண் 1447, எண் 7 (ப.எண்.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. விலை ரூ.35/-

ஒன்றரை அடியில் உலகளந்த வள்ளுவனின் தத்துவங்களை அழகான சின்னச் சின்னக் கதைகளாக வடித்திருக்கிறார் ஆசிரியர். திருடாதே, ஏமாற்றாதே, அடைக்கலம் என்று வந்தவனைக் காப்பாற்று... என்று உயர்ந்த குணங்களைக் கற்பிக்கும் குட்டிக் கதைகள், எளிய வார்த்தைகளில்!



மதுரை வீரன் கதை
வெளியீடு : குட் புக்ஸ் பப்ளிகேஷன், பிளாக் எண் ஏஏ-96ஏ, (பிள்ளையார் கோயில் எதிரில்), அண்ணா நகர், சென்னை-600 040

பலரும் அறிந்த மதுரை வீரனின் கதை. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு வீரன், தன் திறமையால் - ஆற்றலால் - வீரத்தால் கொண்டாடப்பட்டான். பின்னாளில் அவனை தெய்வமாக மக்கள் வழிபட முற்பட்டனர். பாரம்பரியப் பாடல்களையும் ஆங்காங்கே பயன்படுத்தியிருப்பது, வாசிப்பில் சுவை கூட்டுகிறது. அடுத்த தலைமுறைக்கும், நம் பாரம்பரியத்தைக் கொண்டு சேர்க்கும் நல்ல முயற்சி.



- ராகுல்

ஆடு போலவும், மான் போன்றும் தோற்றமளிக்கும் விசித்திரக் கலவை மறிமான்கள். இவற்றில் 100க்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு. இவை ஒரே இடத்தில் கூட்டமாக மேயப் போகும். கோடைகாலமோ, மழைக்காலமோ, குளிர்காலமோ எதுவாக இருப்பினும் இவை தம் இருப்பிடங்களிலிருந்து மாறுவதில்லை. ஆனால் ஐரோப்பா மற்றும் ஆசியா மைனரில் உள்ள மலைப் பகுதிகளில் காணப்படும் மறிமான்கள், குளிர்காலத்தில் மலையை விட்டுச் சம வெளிக்கு வந்து விடுமாம்.

சாமியாஸ் (chamios) என்று சொல்லப்படும் இவை, மிகவும் விரைவாக ஓடக்கூடியவை. ஆண் இனம் ஏறக்குறைய 75 செ.மீ. உயரம் வரை வளரும். எடை 30 முதல் 40 கிலோ வரை இருக்கும். பெண்மான் உருவத்தில் சிறியது. எடையும் ஆண் மான்களின் எடையில் பாதிதான் இருக்கும்.

கோடைகாலத்தில் இதன் உடல் செம்பழுப்பு நிறத்தில் காணப்படும். குளிர் காலத்தில் கரும்பழுப்பு நிறத்துக்கு மாறிவிடும். இதன் மூக்கிலிருந்து கண் வரை ஒரு கறுப்புப் பட்டை காணப்படும். கொம்பு, கறுப்பு நிறத்தில் 15 செ.மீ. முதல் 30 செ.மீ. நீளம் வரை வளரக் கூடியது. அது, நெற்றியிலிருந்து முளைத்து நுனிப்பகுதி பின்பக்கமாக வளைந்திருக்கும்.

மலைப்பகுதியில் தேவதாரு மரங்கள்

நெற்றிக் கொம்பன்!



அடர்ந்த காடுகளே இதன் இருப்பிடம். அங்கே ஆறு மீட்டர் அகலமுள்ள நீரோடைகளைக் கூட, மிக அலட்சியமாகத் தாண்டிச் செல்லும் திறன் இவற்றுக்கு உண்டு. மலைப் பாறைகளின் ஒடுங்கிய விளிம்புகளில் கம்பீரமாக நின்று கொண்டு இவை காட்சி தரும். இவை இரட்டைக்குளம்பிகள் வரிசையில் 'போவிடே' குடும்பத்தைச் சேர்ந்தவை. ஐரோப்பாவைத் தாயகமாகக் கொண்டவை இந்த மறிமான்கள். சீனா, திபெத், நியூஸிலாந்து உள்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் இவை காணப்படுகின்றன. இவற்றின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளால், திபெத் பகுதியில் இவற்றின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

-எஸ். தணிகைவேல்,
பெரிய காஞ்சிபுரம்





அலைப்



கடல் தோன்றிய காலம்! மனிதன் கடலைப் பார்க்க வந்தான். கடல் அழகாக இருந்தது. அதன் அலைகள் புரண்டு புரண்டு மண்ணைத் தொட்டுப் போயின. அலை நிற்கும் என்று பார்த்தான். நிற்கவில்லை. பொறுத்துப் பார்த்த மனிதன் கோபமடைந்தான். அலையைப் பிடித்து நிறுத்தினான்.

''ஏ அலைகளே... கடலுக்குள்ளேயே இருக்க வேண்டியதுதானே... எதற்கு பூமியைத் தொட்டுச் செல்கிறீர்கள்?''

சீறினான்; அலைகள் பயந்தன.

''எங்களை விட்டுவிடு... புரண்டு புரண்டு நாங்கள் வராவிட்டால், கடல் அப்படியே அழுங்கிவிடும். எங்களைப் புரண்டு வர அனுமதி...''

''சரி; அப்படியானால் எனக்கு என்ன தருவீர்கள்...?''

''தருகிறோம் நிறைய.'' அலைகள் சொன்னபடி செய்தன. மீன்களைத் தந்தன. சிப்பிகளைத் தந்தன. மனிதன் கடலுக்குள்ளே போய் மீன்பிடிக்க அனுமதித்து உதவி செய்தன.

மனிதன் சந்தோஷமானான். படகு தயாரித்தான்; அடுத்து கப்பல் செய்து உல்லாசமாகப் பயணித்தான். உள்ளே குதித்து மூழ்கி, முத்துக்களை எடுத்துக்கொண்டான். கடலினின்று பலனைப் பெற்றுக்கொண்டான்.

ஒருநாள் பேரலைகள் எழுந்தன; ஆர்ப்பரித்தன; பூமியை அடியோடு இழுத்துப் போயின. மனிதன் வெகுண்டான். மீண்டும் அலைகளிடம் வந்தான்.



எஸ். ஜூலியட் மரியலில்லி

"ஏ... அலைகளே... ஒட்டுமொத்தமாய்த் திரண்டு, எம் இனத்தை அழிக்க வந்தீர்களா?"

அலைகள் பெருங்குரலெடுத்துச் சிரித்தன. மனிதன் ஆவேசமானான்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்? உங்கள் பெயரென்ன?"

அலட்சியமாகப் பதில் சொல்ல முற்பட்டன அலைகள்.

"நீங்கள்தான் சுனாமி என்று பெயர் சூட்டியுள்ளீர்கள். நாங்கள் என்னமோ அதே அலைகள்தான்... நாங்கள் மீன்களைக் கொடுத்தோம். முத்துக்களைக்

பேச்சு!

கொடுத்தோம். கடலுக்குள் பிரயாணம் செய்ய அனுமதித்தோம்... இப்படி எவ்வளவோ செய்தோம். பதிலுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

மனிதன் தடுமாறினான்.


"ஏன் தடுமாறுகிறாய்? நாங்கள் செய்ததற்குக் கைம்மாறாக நீங்கள் குப்பை, காகிதம், பிளாஸ்டிக்... என்று போட்டு, கடலை கழிவுக் கூடமாக்கினீர்கள். உங்கள் உணவுக்கு உப்பு கொடுத்தோம். எங்களைக் குப்பைக் கூடையாக்கினீர்கள். எங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளவே நாங்கள் பேரலைகளாக மாறி, பொங்கியெழுந்தோம். இது உங்களுக்கு கடல் புகட்டும் பாடம்..."

மனிதன் வெட்கித் தலைகுனிந்தான்.

"இனி சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்கிறோம். இயற்கைச் செல்வமான கடலை சீர்கெடாமல் பாதுகாப்போம்..." என்றான் புரிந்த நிலையில்.

"அப்படியானால் நாங்களும் இனி பேரலையாக மாறமாட்டோம். இனி நண்பர்களாகவே இருப்போம்..."

அலைகள் மீண்டும் பூமியைத் தொட்டு விளையாட ஆரம்பித்தன.



பாதுகாப்பு

மெல்லிய கோடு; மிரட்டும் பார்வை!

கம்பீரமான தோற்றம், பார்வை, நடை, என்று பார்ப்பவரை ஈர்க்கும் தன்மை கொண்டது புலி. இதில் வங்காளப் புலி (Bengal Tiger) சைபீரியப் புலி, காஸ்பியன் புலி (Caspian Tiger) என்று இவற்றில் பல வகைகள் உண்டு. அவற்றில் ஒன்று சுமத்ரா புலி (Sumatran Tiger). மேற்கு இந்தோனேசியப் பகுதியான சுமத்ராவில் மட்டுமே இந்தப் புலியினம் காணப்படுவதால், சுமத்ரா புலி என்று இதைக் குறிப்பிடுகிறார்கள். மற்ற புலிகளின் உடலில் காணப்படும் கோடுகளைவிட மெல்லியதாக இவற்றின் உடலில் கோடுகள் காணப்படும். இவற்றை வித்தியாசப்படுத்திக் காட்டுவது இந்தக் கோடுகள்தாம். சுமார் 6.8 அடி நீளமும், 91 கிலோ எடையும் கொண்டதாகக் காணப்படும் இந்தப் புலிகள்தான், தற்போது உள்ள புலிகளிலேயே மிகச்சிறியவை என்கிறார்கள். நீரில் வெகு வேகமாக நீந்தும் ஆற்றல் கொண்டவை இந்தப் புலிகள்.

விவசாயம் மற்றும் பாமாயில் தயாரிப்பு போன்றவற்றுக்காகக் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டதால், இந்தப் புலிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிட்டது. 1998ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, நானூறு முதல் ஐந்நூறு புலிகளே இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றில் பெருமளவு, இங்குள்ள தேசியப் பூங்காக்களில் காணப்படுகின்றன. 'தற்போது, இந்தப் புலிகளின் எண்ணிக்கை இன்னமும் குறைந்துவிட்டது. இதைக் கருத்தில் கொண்டு IUCN அமைப்பு, அழியும் நிலையில் உள்ள விலங்குகளில் ஒன்றாக இதை அறிவித்திருக்கிறது. இவற்றைப் பாதுகாக்க, இந்தோனேசிய அரசு உலகளாவிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

- யாழினி அன்புமணி,
உ.எண். 114, ஈரோடு



இருமலை விரட்டும் இலை!


பெரும்பாலான வீடுகளில் நாம் காண்கின்ற மருத்துவ குணமுள்ள செடி, திருநீற்றுப் பச்சிலை. Ocimum Basilicum என்கிற அறிவியல் பெயரால் குறிப்பிடப்படும் இந்தச் செடி, மிகச் சிறந்த மூலிகை. துளசி வகையைச் சார்ந்த இந்தச் செடி 50 செ.மீ. உயரம் வரை வளரக்கூடியது. இதன் இலைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெயில் பல வேதிப் பொருட்கள் அடங்கியுள்ளன.

உடலின் வெப்பத்தைக் குறைக்கவும், வயிற்றிலுள்ள வாயு பிரியவும், சித்த மருத்துவத்தில் லேகியங்கள் தயாரிக்கவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். பசுமையான இதன் இலைகள், இருமல், சளி போன்றவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறன. பசியின்மை, உறக்கமின்மை போன்ற குறைபாடுகளுக்கும், முகப்பரு, காதுவலி போன்றவற்றுக்கும் இதன் சாறு பயன்படுகிறது.

திருநீறு போன்று மணம் கொண்டதால், திருநீற்றுப் பச்சிலை என்று பெயர் கொண்ட இந்த மூலிகை, இந்தியா தவிர ஃபிரான்ஸ், மொராக்கோ, இந்தோனேசியா, இத்தாலி உட்பட பல நாடுகளிலும் பயிரிடப்படுகிறது. இலை, விதை, வேர் என்று இதன் பாகங்கள் அனைத்தும் ஆரோக்கியம் தருகின்றன. மாடி வீடுகளில், தொட்டியில் அமைதியாய் இருக்கும் செடிக்குக்கூட மனிதனைக் காக்கும் அற்புதம் இருக்கிறது என்பது இயற்கை அற்புதம் அல்லவா!

– ராம்





இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியை ஒட்டிய, அரபிக்கடலில் அமைந்துள்ள தீவுக் கூட்டமே லட்சத் தீவுகள். கேரளாவின் மலபார் கடற்கரைப் பகுதியிலிருந்து 200 முதல் 400 கி.மீ. தொலைவில் இவை அமைந்துள்ளன.

மொத்தம் 36 தீவுகள் இருந்த போதிலும், அவற்றில் அகட்டி, அமினி, அண்டிரோட், பிட்ரா, செட்லட், கட்மட், கல்பேனி, கவரட்டி, கில்டன், மினிகாய் ஆகிய பத்து தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள். பங்காராம், பிட்டி இரண்டும் நூறுக்கும் குறைவானவர்கள் மட்டும் வசிக்கும் தீவுகள். கவரட்டி தீவில் உள்ள கவரட்டி நகரம் தான், லட்சத்தீவுகளின் நிர்வாகத் தலை நகரம்.

மக்கள் தொகை

2001ஆம் ஆண்டு சென்சஸ் படி சுமார் 60 ஆயிரத்து 500 பேர் இங்கு வசிக்கிறார்கள்.இவர்களில் 90 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்கள் சன்னி இன முஸ்லிம்கள். மலையாளம் ஆட்சி மொழி. மினிகாய் தீவில் மட்டும் மக்கள் 'மால்' என்ற மொழியினைப் பேசுகிறார்கள். இது மாலத் தீவுகளில் பேசப்படும் மொழி. மக்கள் பேசும் இன்னொரு மொழி ஜெசாந். (இதற்குத் 'தீவு மொழி' என்ற பெயரும் உண்டு) இந்திய அரசு, இங்கு வசிக்கும் மக்கள் அனைவரையும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களாக அறிவித் துள்ளது.

வரலாறு

இந்தத் தீவு பற்றிய செவி வழிச் செய்திகளின்படி, சேர நாடாக விளங்கிய கேரளாவை ஆண்ட சேரமான் பெருமாளின் காலத்தில் இங்கு மக்களின் குடியேற்றம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

ஏழாம் நூற்றாண்டில், மெக்காவிலிருந்து புறப்பட்ட உபயதுல்லா என்பவர், லட்சத்தீவுப் பகுதியில் இஸ்லாமிய மதத்தைப் பரவச் செய்தார். அண்டிரோட் தீவில் உள்ள அவரது சமாதி, உள்ளூர் மக்களால் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

நேரடி ஆட்சி


கண்ணனூரை அரக்கல் மன்னன் ஆண்டபோது லட்சத்தீவு மக்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாகவே, அவர்கள் திப்புசுல்தானை அணுகி முறையிட, லட்சத் தீவுகளின் பெரும்பகுதி திப்புசுல்தானின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. திப்புவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, 1854ல், லட்சத்



நீர்ச்சறுக்கு நிலம்!



கௌதம் ராம்



தீவுகளும் பிரிட்டிஷ் அரசின் கீழ் வந்தன. சென்னை ராஜதானியின் பகுதியாக இருந்த மலபார் மாவட்டத்தின் அங்கமாயின. 1956ல் கேரளா தனி மாநிலமாக உருவான சமயத்தில், இந்திய அரசு மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இந்தத்தீவுகளை அறிவித்தது.

சட்ட மன்றம் இல்லை

தற்போது, மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படும் நிர்வாகியின் கீழ் லட்சத்தீவு அரசாங்கம் இயங்கி வருகிறது. பஞ்சாயத்து ராஜ் அடிப்படையில் கிராம பஞ்சாயத்துக்களும், மாவட்ட பஞ்சாயத்துக்களும் செயல்படுகின்றன. இங்கே சட்ட மன்றம் இல்லை. லட்சத்தீவு மக்களின் சார்பாக, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, லோக்சபாவுக்குச் செல்கிறார். ராஜ்ய சபாவில் உறுப்பினர் இல்லை. லட்சத்தீவுகள், கொச்சியில் உள்ள கேரள உயர்நீதிமன்றத்தின் எல்லைக்குட்பட்டது.

தொழில்

இங்கு அபரிமிதமாகத் தென்னை விளைகிறது. இவை உயர்ந்த தரத்துடன் இருப்பதால், கணிசமான எண்ணெய் வளம் கொண்டுள்ளன. பல நூற்றாண்டுகளாகவே தேங்காய் நார் கொண்டு கயிறு தயாரிக்கும் தொழில் சிறப்புற்று விளங்குகிறது. சுமார் 2500 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் தென்னை பயிராகிறது. சமீபகாலமாக காளான் வளர்ப்பும், வெனிலா பயிரிடுதலும் பிரபலமாகி வருகின்றன. கைவினைப் பொருட்கள் தயாரிப்பில் பயிற்சி அளித்து, கிளிஞ்சல்கள், தேங்காய் நார் மற்றும் கொட்டாங்குச்சி போன்றவற்றைக் கொண்டு கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மக்களின் முக்கிய தொழில் மீன் பிடித்தல். உள்ளூர் தேவைக்குப் பயன்படுத்தியது போக மீதமாகும் மீன்களைப் பதப்படுத்தி, கேரளாவுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.



குடிநீர்!

மக்கள் சந்திக்கும் பெரும் பிரச்னை குடிநீர் பிரச்னை. மற்றொன்று மின்சாரம் பற்றாக்குறை. இவை சின்னஞ்சிறு தீவுகளாக உள்ளதால், நிலத்தடி நீரை அதிக அளவில் பயன்படுத்தினால், கடல் நீர் உட்புகும் அபாயம் உள்ளது. எனவே, ஓரளவு மட்டுமே நிலத்தடி நீரைப் பயன்



படுத்திக்கொண்டு, கடல்நீரைக் குடிநீராக கும் திட்டமும், மழைநீர் சேகரிப்பு திட்டமும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து

1950கள் வரை இந்திய நிலப் பரப்புக்கும், லட்சத் தீவுகளுக்கும் இடையிலான மக்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்குச் சில சிறிய கப்பல்கள் மட்டுமே இருந்தன. காலப் போக்கில் தேவை அதிகரிக்க, எத்தகைய பருவ நிலையிலும் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கு உதவிட, கப்பல் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.



கல்வி

மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டபோது, இங்கே மொத்தம் ஒன்பது ஆரம்பப் பள்ளிகள் மட்டுமே இருந்தன. எழுத்தறிவு பெற்றவர்கள் 15 சதவிகிதத்தினர். தற்போது பள்ளிகளின் எண்ணிக்கை நாற்பதைத் தாண்டிவிட்டது. பள்ளிகளில் படிப்பவர்களில் 46% பெண்கள். உள்ளூர் பள்ளிகளில் படிப்பை முடித்து விட்டு மேலே படிக்க கேரளாவுக்கோ மற்ற இடங்களுக்கோ செல்லும் மாணவர்களின் கல்விச் செலவை, லட்சத்தீவு அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்தறிவு பெற்றவர்கள் இப்போது 82 சதவிகிதம் .

தகவல் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, டி.வி. ரேடியோ, கணினி மூலமாக இந்திய ரயில்வே முன்பதிவு வசதி, டெலிஃபோன் தொடர்புகள் போன்றவற்றின் பயன்களை மக்கள் அனுபவிக்கிறார்கள். லட்சத்தீவுகள் நிர்வாகம் சந்திக்கும் முக்கியப் பிரச்னை கடல் அலைகளால் ஏற்படும் நில அரிப்பு. இதனைக் கட்டுப்படுத்த விஞ்ஞானபூர்வமான தடுப்பு நடவடிக்கைகளை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

சுற்றுலா

கடந்த சில ஆண்டுகளாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. லட்சத்தீவு நிர்வாகம் தனியார் துறையினருடன் இணைந்து சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கட்டுப்பாடு

நீர்ச்சறுக்கு போன்ற தண்ணீர் சாகச விளையாட்டுகளுக்கு இங்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதால், அதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மிகுந்த எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கினால், இயற்கை எழிலும், சுற்றுச் சூழலும், குறிப்பாக தீவுகளின் கடற்கரைப் பகுதிகளை ஒட்டிய பவழப் பாறைகளும் பாதிப்படையும் என்பதால், மிகுந்த எச்சரிக்கையுடன் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அக்டோபர் முதல் மே வரையிலான காலம் கப்பல் மூலம் செல்ல உகந்தது. லட்சத்தீவு நிர்வாகத்தின் பர்மிட் பெற்ற பிறகே, சுற்றுலாப்பயணிகள் அங்கு செல்ல முடியும் என்பது ஒரு முக்கிய தகவல். ●

✱ 'ஆனைமலையில் திருவிழா' கவிதை வரிகளை மிஞ்சிய கனகச்சிதமான படங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்த்தன.- **ஆர்.ஆர்.உமா, மணலிவிளை** ✱ வயோதிக வழிப்போக்கரின் வயிற்றுப்பசியை ஆற்றிய மாரியாவின் அறப்பாங்கால் கிட்டிய செல்வச் செழிப்பு 'தர்மம் தலைகாக்கும்' என்பதையும்; கல்யாவின் கல்மனத்துக்குக் கிடைத்த இழிவு 'ஈவது விலக்கேல்' என்பதையும் அறிவுறுத்தின ஜானகி மணாளனின் நாடோடிக்கதை அருமை! - **'இனாம்' கேசவன், கோவில்பட்டி** ✱ டயட்' என்ற பெயரில் பெரும்பாலோர் உணவைக் குறைத்துச் சாப்பிட்டு, இரத்த சோகையால் அவதிப்படுகிறார்கள். அதற்கு ஒரு தீர்வாக அமைந்தது 'இரத்தம் பெருக்கும் உணவுகள்' கட்டுரை.- **ஆர். பிருந்தா, பெங்களூரு** ✱ மேகம் ஏழு வகை என்ற கட்டுரை இதுவரை அறியாத தகவல்களை அறிய வைத்தது. கூடவே, 'மழை May come ஆக இல்லாம மழை தர மேகமா இருந்தால் சரி' என்ற வரியில் சிலேடை மழை சிந்தியது.- **ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை** ✱ 'நவம்பர் கோகுலம்' குதூகலம் மட்டுமன்று, தாத்தா வீடு! சிறுகதை வினாடி வினா நிகழ்வு என்று சிறப்பாகத் திகழ்ந்தது.- **பி.எஸ். நிக்கிலேஷ், சென்னை** ✱ 'ஆதி' படக்கதை... 'ஆ... தீ...!' என்று பரபரக்க வைத்து தீபாவளிக்கான பரவசத்தை ஊட்டிவிட்டது.- **ஆர்.ஜே.ஜெய்ஹரிதா, செல்வமருதூர்** ✱ 'பண்டிகையைக் கொண்டாடுவதுடன் நின்று விடாமல், அருகில் உள்ள ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களையும் சந்தோஷப் படுத்துவதால் நம் உள்ளங்களிலும் மகிழ்ச்சிப்பூ பூக்கும்' என்ற கருத்தை உள்ளடக்கிய அட்டைப் படக் கட்டுரை அருமை. **- ம. அக்ஷயா, உ.எண்: 1346, அரூர்** ✱ பைசாகி திருவிழாவோடு, பைசாவும் நிறைந்த நகரம் என்பதை 'பணக்கார நகரம்' கட்டுரைத் தொகுப்பு மூலம் (சண்டிகர்) அறியமுடிந்தது. - **ஆர்.ஏ.விஜய சாய் பாலா, திருச்செந்தூர்** ✱ உறுப்பினர்கள் தங்கள் படைப்புகளை அனுப்பும் போது உறுப்பினர் எண்ணை மட்டும் குறிப்பிட்டால் போதுமல்லவா? வீடு மற்றும் பள்ளியின் முகவரியினை ஒவ்வொரு முறையும் குறிப்பிட வேண்டும் என்று கட்டாயம் இல்லையே? அவற்றில் மாறுதல் இருந்தால் மட்டும் குறிப்பிட்டால் போதுமல்லவா? ஏனெனில் அஞ்சல் அட்டையில் படைப்புகளை அனுப்பும் போது முகவரிகளே பாதி இடத்தை ஆக்ரமித்து விடுகின்றன. தயவுசெய்து விளக்கம் அளியுங்கள். **- பா.பிரணவப்ரியா, உ.எண்: 1815, சென்னை**

கடித மாலை

ஒவ்வொரு முறை படைப்பை அனுப்பும்போதும், உறுப்பினர் எண், வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரிகளை அவசியம் எழுத வேண்டும். உங்கள் படைப்பு தேர்வு பெற்றால், உங்களைத் தொடர்பு கொள்வதற்கு சுலபமாயிருக்கும். - ஆர்.

கன கச்சிதம்!



மதிப்புமிக்க பொருள்!

'வாழ்க்கையில் மிகவும் மதிப்பு மிக்க பொருள் எது?'

மன்னர் மகிபாலன் எழுப்பிய கேள்வியை அவையில் இருந்த அனைவரும் கவனித்தார்கள் என்றாலும், எவரும் உடனடியாக பதில் சொல்லவில்லை. 'மதிப்பு என்பது எதைக் குறிக்கிறது? மன்னர் எந்த அர்த்தத்தில் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்' என்ற யோசனையில் இருந்தனர் அனைவரும்.

அந்த மௌனத்தைக் கவனித்த மன்னர் மீண்டும் கேட்டார்: ''அப்படியென்ன கடுமையான கேள்வியா இது? அனைவரும் மௌனமாக இருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது.'' அதைக் கேட்டதும் ஒருவர் எழுந்து சொன்னார்:

''உயிர்தான் மதிப்புவாய்ந்த பொருள். அது இல்லையென்றால் நம்மால் எந்த மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியாது.''

''இல்லை. அறிவுதான் உயர்ந்தது. வாழ்க்கையை வாழ மிக அவசியம் அறிவுதான். அது இல்லையென்றால், அடுத்தடுத்து துன்பங்களைச் சந்திக்க நேரிடும்.'' என்றார் அடுத்தவர்.

''அறிவு அவசியம்தான். ஆனால், பொறுமைதான் மிக முக்கியம். பொறுமையில்லாவிட்டால், வெற்றியில் முடியக்கூடிய செயல்கள்கூட தோல்வியாக ஆகிவிடும்.'' என்றார் மூன்றாமவர்.

''நாம் மட்டுமல்ல; பூமியில் உள்ள அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு ஆதாரம் சூரியனின் ஒளிதான். எனவே, சூரியன்தான், மிக முக்கியமான பொருள்'' என்றார் இன்னொருவர்.

ஒவ்வொருவர் சொன்னதையும் கேட்டுக் கொண்டே வந்த மன்னன் அடுத்தவரைப் பார்த்தான். ''மன்னா, வாழ்க்கைக்கு இவையெல்லாம் தேவைதான். ஆனால், வாழ்வது என்று சொன்னால், மற்றவர்களிடம் அன்பு காட்டுவதுதான். அது இல்லையென்றால், வாழ்க்கை என்பதில் அர்த்தமில்லை.'' என்றார் அவர்.

'பலே' என்று சொல்லி மன்னன் கை தட்டும் போது, ஓர் அறிஞர் எழுந்தார்: ''மன்னவா! இந்த அறிஞர்கள் சொன்னது



அனைத்துமே உண்மைதான். ஆனால், இவை அனைத்தையும்விட முக்கியமானது காலம்.''

''அதெப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றான் மன்னன். ''விதைப்பதற்கு காலம் உண்டு. அறுவடைக்குக் காலம் உண்டு. இதைத் தவறவிட்டால், பொருள் இழப்பும், உணவுப் பஞ்சமும் ஏற்படும். இதைப் போல, படிப்பதற்குரிய காலம் இளமை. இதைத் தவறவிட்டால், பிற்காலம் துன்பங்களை தரக்கூடியதாகும். இப்படி வாழ்வின் ஒவ்வொரு நிலையும் காலங்களால்தான் தீர்மானமாகின்றன. அதை

அறிவுரைக் கதை

வீணடித்துவிட்டால், மீண்டும் பெறமுடியாது.. எனவே, மதிப்பு மிக்க பொருள் காலம்தான்!''

அறிஞர் சொல்லி முடித்ததும், அவை யிலிருந்த அனைவரும் கரவொலி எழுப்பினர், 'அவர் சொன்னதுதான் சரி' என்பதற்கு அடையாளமாக!

- ஜி. எஸ். சபரி,
உ. எண்: 1475, கோபி.



''என்ன வேகமா ஓட்டறாங்க? ஓட்டறது 'ஃப்ளைட்'னு நினைச்சுட்டாங்களா?' என்று வேகமாகக் காரோட்டுபவர்களைச் சொல்வார்கள். ஆனால், நிஜமாகவே பறக்கும் காரைக் கண்டுபிடித்துவிட்டார்கள் விஞ்ஞானிகள். அதற்கு போக்குவரத்து லைசென்ஸும் கொடுக்கப்பட்டு விட்டது. என்ன நிபந்தனை என்றால், இந்தக் காரை ஓட்டுபவர்கள் ஸ்போர்ட் பைலட் லைசென்ஸும் எடுத்திருக்க வேண்டும். அப்போது தான் ஓட்ட முடியும். Terrafugia Transition என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பறக்கும் காரில், இரண்டு பேர் பயணம் செய்யலாம். மணிக்கு 145 கி.மீ. செல்லும் இந்தக் கார், இறக்கைகளை விரித்தால் 185 கி.மீ. வேகத்தில் பறந்தும் செல்லும் என்கிறார்கள். இதன் இறக்கைகள் மடங்கும் அமைப்பைப் பெற்றவை. 'கார் ஷெட்டில்' நிறுத்தும் போது, இறக்கைகளை மடக்கிக் கொள்ளலாம்.

வானிலை மோசமாக இருந்தால் தரையில் இறங்கிப் பயணிக்கவும், சாலை நெரிசல் அதிகமானால் மேலெழுந்து பறக்கவும் இந்தக் கார் பயன்படும். விலை எவ்வளவு தெரியுமா? 1,94,000 டாலர்! (நம்மூர் ரூபாயில் மதிப்பு வேண்டுமா? தோராயமாக, 50ஆல் பெருக்கிப் பாருங்கள்). 70



பறக்கும்

பேர் இந்தக் காருக்கு முன்பதிவு செய்திருக்கிறார்களாம். 'அடுத்த ஆண்டு, இந்தக் கார்கள் நிஜமாகவே பறக்கும்' என்கிறது, வடிவமைத்த Terrafugia Inc என்னும் நிறுவனம்.


என்றாலும், இந்தப் 'பறக்கும் கார்' கனவு பதினெட்டாம் நூற்றாண்டில் உண்டானது. 1917ல் 'கிளன் கர்டிஸ்' (Glenn Curtiss) ஒரு பறக்கும் காரைக் கண்டுபிடித்தார். இவரை 'பறக்கும் கார்களின் தந்தை' என்கிறார்கள். இவரைத் தொடர்ந்து, 'வால்டோ வாட்டர்மேன்' (Waldo Waterman), 'ராபர்ட் ஃபுல்டன் (Robert Fulton)' என பலரும் பறக்கும் கார்களை வடிவமைத்தனர். 1956ல், 'மோல்டன் டெய்லர்' (Moulton Taylor) வடிவமைத்த 'ஏரோ கார்' வெற்றிகரமாகச் செயல்பட்டது. உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கான சான்றிதழும் கிடைத்தது. ஆனாலும், போதுமான நிதி வசதியின்மையால், அது வெற்றி பெறவில்லை.

அறிவியலைப் பொறுத்தவரை, எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும், அதைத் தகர்த்து மீண்டு எழுவதுதானே இயல்பு! அப்படித்தான், Terrafugia Transition வெற்றி பெற்றிருக்கிறது. குறைந்த விலையில் 'நானோ கார்' கொண்டு வந்த மாதிரி, இந்த 'பறக்கும் கார்' வந்தால்...?!




கார்!

முனைவர் ஆசுரா



ஆதி
அடுத்த 15 நாட்களில் கனமழை பெய்யும். இது ஒரு மாதம் வரை நீடிக்கும் வாய்ப்புண்டு...
என்னது? ஒரு மாசத் துக்கு மழை பெய்யுமா?
அப்படிக் கொட்டினா, சாப்பாட்டுக்கு என்ன செய்வது?
அப்போ, முன்கூட்டியே உணவை சேமிக்கணும்
சூப்பர், ஆதி! சரியான இடத்துக்கு வந்துட்டேடா.
கோழிப் பண்ணை


அசத்திட்டோம்ல; சாப்பாட்டைப் பத்தி இனிமேல் கவலையே இல்லை.
மெத்தைல உட்கார்ந்த மாதிரி, சுகமா இருக்கு!
என்ன இது? வானிலை அறிக்கைச் சொல்லி இருபது நாள் ஆச்சே. இன்னும் மழை வரலையே...
நாளை முதல் மழை பொழிய ஆரம்பிக்கும்.
சே.. எவ்வளவு யோசிச்சும், மழைல உணவு தேடறாப்ல ஆயிடுச்சே...
குழப்பமா இருக்கா? என் வீட்டைப் பாருங்க. அடை காத்த மாதிரி உட்கார்ந்தது தப்பாய்டுச்சு...
குஞ்சுகளைச் சாப்பிட மனசு இல்லேப்பா... அதான் இவங்களுக்கும் சேர்த்து இரை தேடப் போறேன்.

தங்கங்கள்

ச.ந.கண்ணன்



தெண்டுல்கருக்கு 37 வயது. இன்னும் எத்தனை நாள் அவரை கிரிக்கெட் மைதானத்தில் பார்க்க முடியும்? 'அதைப்பற்றியெல்லாம் யோசிக்கவே இல்லை' என்கிறார் சச்சின். 'என் வயதைப் பற்றி நான் அதிகம் கவலைப்படுவதில்லை. எவ்வளவு காலம் என்னால் கிரிக்கெட்டை ரசித்து ஆடமுடியுமோ அதுவரை ஆடுவேன்' என்று சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறினார் சச்சின்.

காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்று, இந்திய அணியை இரண்டாவது இடத்துக்கு உயர்த்திய சாய்னா நேவால் இன்றைக்கு விளம்பர உலகின் சூப்பர் ஸ்டார். இதுவரை இந்தியப் பெண் விளையாட்டு வீராங்கனைகள் யாரும் எட்டாத ஒரு சாதனையை இவர் நிகழ்த்தியிருக்கிறார். இந்த வருடம் காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்றதோடு மட்டுமில்லாமல், இந்தியன் ஓபன், சிங்கப்பூர் ஓபன், இந்தோனேசியன் சூப்பர் சீரிஸ் ஆகிய போட்டிகளிலும் சாய்னா வென் றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



* சாய்னா


காமன்வெல்த் போட்டியில் வட்டு எறிதல் போட்டியில் தங்கம் வென்ற கிருஷ்ணா பூனியா, ஒரு பெரிய சவாலுக்குத் தன்னைத் தயார்படுத்தியுள்ளார். உலக சாம்பியனான டானி சாமுவேல்ஸும் பூனியாவும் அடுத்த மார்ச் மாதத்தில் ஒத்தைக்கு ஒத்தையாக மோதி, யார் சிறந்த வீராங் கனை என்று முடிவெடுக்கப் போகிறார்க ளாம். 'சரியான ஃபார்மில் இல்லாததால் தான் காமன் வெல்த் போட்டியில் டானி சாமுவேல்ஸ் பங்கு பெறவில்லை' என்று பூனியா அளித்த பேட்டியினால் எழுந்த சர்ச்சையை அடுத்து,



* ககன்



* கிருஷ்ணா பூனியா




இருவரும் போட்டி போட்டுத் தம்மை நிரூபிக்க முடிவெடுத்திருக்கிறார்கள். இந்தப் போட்டி மார்ச் மாதம் ஆஸ்திரேலியாவில் நடக்க உள்ளது.

உலக சாம்பியனும் காமன்வெல்த் சாம்பியனுமான சுஷில் குமாருக்கு தில்லி விளையாட்டுத் துறையின் இயக்குநர் பதவி அளிக்கப்போவதாக தில்லி அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. சுஷில் குமார் தற்போது ரயில்வே துறையில் பணியாற்றி வருகிறார். மிகுந்த பலசாலியாக இருக்கும் இவர், இதுவரை அசைவத்தைத் தொட்டது கூடக் கிடையாது.

2006 மெல்போர்ன் காமன் வெல்த் போட்டியில் மூன்று தங்கம் வென்ற துப்பாக்கிச் சுடும் வீரர் ககன் நரங், தில்லி காமன்வெல்த் போட்டியில் நான்கு தங்கம் வென்று சாதனை படைத்தார். இதற்காக ஆந்திர அரசு ககனுக்கு 40 லட்சம் அளித்தது. ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அபினவ் பிந்த்ரா, ககனை 'உலகின் சிறந்த துப்பாக்கிச் சுடும் வீரர்' என்று சமீபத்தில் பாராட்டியுள்ளார்..


ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த தீபிகா குமாரி, கடந்த காமன்வெல்த் போட்டியில், வில்வித்தையில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். 1994ஆம் ஆண்டு ராஞ்சியில் பிறந்த இவரது தந்தை ஆட்டோ ஓட்டுனர். தாய் நர்ஸ். சுமாரான குடும்பப் பின்னணி கொண்ட இவர், கடந்த 2009ஆம் ஆண்டு அமெரிக்காவில், Ogden-ல் நடைபெற்ற உலக இளைஞர் வில்வித்தைப் போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றவர்.

புரிதல்!



தொழிலதிபர் ஹென்றி ஃபோர்டு தினமும் தம்முடைய தோட்டத்தைச் சுற்றி வருவார். சில தினங்களாக அவர், தோட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லாமலே இருந்தார். இதை கவனித்த அவரது மகன், ''அப்பா, தோட்டத்தின் அந்தப் பகுதிக்கு ஏன் செல்லவில்லை?'' என்று கேட்டான்.

மகனை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார் ஃபோர்டு. அங்கு ஒரு பறவை கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்தது. 'அந்தப் பகுதியில் நடந்தால், பறவைக்கும் அந்தக் குஞ்சுக்கும் அச்சம் ஏற்படக்கூடும். அவை வேறிடம் தேடிப் பறக்கவும் நேரிடும்' என்பது அவனுக்குப் புரிந்தது. அவற்றுக்குத் தொல்லை தர விரும்பாத காரணத்தால்தான், ஃபோர்டு அந்தப் பகுதிக்குச் செல்லாமல் இருந்திருக்கிறார் என்பதையும் அவர் சொல்லாமலே புரிந்து கொண்டான்.



நம்பிக்கை!

சம்பவம்

கருணை!

தாமஸ் மூர், ஆங்கில அறிஞர். அவர் தினமும் தந்தைக்கு முன் நின்று நான்கு முறை குதித்துவிட்டுத்தான் மற்ற வேலைகளைக் கவனிப்பார். அப்போது, அவருக்கு வயது 60. அவர் தந்தையின் வயது 85.

ஒரு சமயம் நண்பர் ஒருவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார். "நான் தினமும் அப்பா முன் குதிப்பதால், அவர் மனத்தில் ஒரு தெம்பு உண்டாகிறது. அவர் 'நம் மகன் குதித்து விளையாடும் அளவுக்கு மிகவும் சின்னவனாகத்தானே இருக்கிறான். அப்படியானால் நமக்கொன்றும் வயதாகி விட வில்லை' என்றெண்ணி உற்சாகமாக இருப்பார். அதனால் நீண்ட காலம் உயிர் வாழ்வார். அந்த நம்பிக்கை ஏற்படத்தான் அவர் முன் குதிக்கிறேன்" என்றார் தாமஸ் மூர்!




ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க அதிபராயிருந்தபோது ஒரு முறை வாஷிங்டன் நகருக்குச் சென்றார். வழியில் பன்றிக் குட்டியொன்று சேற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த லிங்கன், வண்டியை நிறுத்தி, கீழே இறங்கினார். தாம் அணிந்திருந்த ஆடையைப் பற்றியோ, ஒரு ஜனாதிபதியென்றோ நினைக்காமல், சேற்றில் இறங்கி அந்தப் பன்றியை விடுவித்தார். அப்படியே சேறும் சகதியுமாய் வெள்ளை மாளிகையில் நுழைந்தார். அவரைக் கண்டு பலரும் அதிர்ச்சி அடைந்தனர். லிங்கனின் தோற்றத்துக்கான காரணத்தை கார் டிரைவர் எடுத்துரைத்தார். அதைக் கேட்ட அனைவரும் லிங்கனின் செய்கையை வியந்து பாராட்டினர்.



ஆனால், லிங்கன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "வாயில்லாப் பிராணி ஒன்று சேற்றில் சிக்கித் தவித்த காட்சி, என் உள்ளத்தில் முள்ளாய்த் தைத்தது. அந்த முள்ளைப் பிடுங்கி எறிந்தேன். உண்மையில் அப் பன்றிக் குட்டிக்கு நான் உதவினேன் என்பதைவிட, என் உள்ளத்தில் ஏற்பட்ட சிறு வலியை போக்கிக் கொண்டேன் என்பதே உண்மை." என்றார்.

- ஜி.எஸ்.சபரி, உ.எண்: 1475,கோபிசெட்டிபாளையம்.

பெயரைச் சொல்; பரிசை வெல் - 9





1. ______________ 2. ______________ 3. ______________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

.... பின்கோடு ....

போட்டி பரிசு ரூ.1000/-

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.12.2010



அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1876


1877


1878


1879


1880


1881


1882


1883


1884


1885


1886


1887


1888


1889


1890



1891


1892


1893


1894


1895


1896


1897


1898


1899


1900

பயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

